தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

மாற்றம்

விலை ரூ.15– மலர் 21–இதழ் 10–பிப்ரவரி 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

பெண்மையைப் போற்றுவோம்...!

– சிறப்புக் கட்டுரை

வரவு-செலவு கணக்கு கையாளும் முறை

முற்றக் கச்சேரி விவாதம்

■ **திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,**
மேலாண்மை இயக்குநர் (பொ)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

பிப்ரவரி 2020

அன்பு சகோதரிகளே,

சுய உதவிக் குழு இயக்கத்திற்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தர தொடர்ந்து செயல்பட்டு வரும் உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள். மாதந்தோறும் முற்றம் வாயிலாக உங்களை சந்திப்பது எனக்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

பெண்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும், அவர்களின் திறன்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், வறுமையை ஒழிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டதுதான் மகளிர் சுய உதவிக் குழு அமைப்பு.

தருமபுரி மாவட்டத்தில் சிறு அமைப்பாக உருவான சுய உதவிக் குழு இயக்கமானது இன்று மிக மிகப் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு காரணம் உங்களின் செயல்பாடுகளே. நமக்கு ஏற்பட்ட தடைகளைத் தகர்த்தெறிந்து, எதிர்ப்புகளை சமாளித்து, எதையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு இன்று அனைத்துத் தரப்பின் பாராட்டுதலுக்கும் உரியவர்களாக நம் சுய உதவிக் குழு மகளிர் உள்ளனர்.

பல்வேறு பயிற்சிகள், தொழில் முனைப்புகள், வங்கிக் கடன் இணைப்புகள், விவசாயப் பணிகள், பயனுள்ள பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை, குழுக் கூட்டம், கூட்டமைப்பு உருவாக்கம், கிராம வறுமை ஒழிப்புச் சங்க செயல்பாடுகள் என ஊக்கத்துடன் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழு மகளிர், சமுதாய நன்மைக்கும் பாடுபட்டு வருகின்றனர் என்பது பாராட்டுக்குரியது.

குழு செயல்பாடுகள் மற்றுமின்றி உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு பெற்றுள்ளதும், கிராம சபை போன்றவற்றில் பங்கு கொண்டு தங்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதிலும் சுய உதவிக் குழுவினர் என்றும் முன்நிற்கின்றனர். உங்களின் செயல்பாடுகளுக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் நம் தமிழ்நாடு அரசும் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

சுய உதவிக் குழுக்களுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்குதல், பல்வேறு தொழில் பயிற்சிகள் வழங்கி, வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருதல், சுய தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் வழங்குதல், உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல், இயற்கை வேளாண் பொருட்களை விளைவிப்பதற்கும், மாடித் தோட்டங்கள் அமைப்பதற்கும் பயிற்சி வழங்குதல் போன்றவை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதனை அனைத்து மகளிர் சுய உதவிக் குழுவினரும் ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை பெருக்கி வருவது மிகவும் சிறப்பிற்குரியது.

நீங்கள் பெற்றுள்ள வெற்றி மிகப் பெரியதாக இருப்பினும், உங்களின் பயணம் மேலும் தொடர வேண்டும். உங்களின் செயல் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். சுய உதவிக் குழு மகளிர் சாதனை படைப்பவர்கள் என்று மற்றவர்கள் பாராட்ட வேண்டும். வறுமை நீங்கி, வளமை பெருக வேண்டும். கல்லாமை இல்லாமையாக வேண்டும். பெண் நலம் பேண வேண்டும். இவை யாவும் நிறைவேற உங்களின் வெற்றிப் பயணம் மேலும் தொடர வேண்டும். உங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் என்பதை பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர் (பொ)

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல்
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

குறளும்-பொருளும்

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்

கற்றவர் அவையிலே தாம் கற்றவற்றையெல்லாம் பயப்படாமல் கற்றவரின் மனதில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரினும் மேலானவராக மதித்துச் சொல்லப்படுவார்.

உள்ளே...

குடியரசு தின விழாவில் அரசின் திட்டங்கள் குறித்த அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் மூன்றாம் இடத்தைப் பெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு கேடயம் 05

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள், முன்னேற்றம் குறித்த பணி ஆய்வுக்கூட்டம் 06

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ் தேசிய அளவிலான கருத்தரங்கு 08

பெண்மையைப் போற்றுவோம்! 18

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 20

முற்றக் கச்சேரி 2.0 24

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் உலக வங்கிக் குழுவினர் ஆய்வு 27

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட பீகார் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் வருகை 33

➜ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஏப்ரல் 2020 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஏப்ரல் 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஏப்ரல் 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்இதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 21
இதழ் 10
பிப்ரவரி 2020
விலை ரூ.15

- **கௌரவ ஆசிரியர்கள்**

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ),
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**

எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

- **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

- **நிர்வாக ஆசிரியர்**

சி. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **நிதி நிர்வாகம்**

அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**

கூ. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

- **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**
- **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**
- **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
- **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

ஊராட்சி வளர்ச்சி திட்டத்தில் பங்கேற்போம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கிராம ஊராட்சி தேர்தல்கள் முடிந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள் மற்றும் கவுன்சிலர்கள் அனைவரும் பதவியும் ஏற்றுக் கொண்டு விட்டனர். மீதம் உள்ள ஒன்பது மாவட்டங்களுக்கும் கூடிய விரைவில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு தலைமை பண்பிற்கான பயிற்சியும், ஊராட்சியின் வளர்ச்சிக்கு திட்டமிடுவதற்கான பயிற்சியும் வழங்க ஊரக வளர்ச்சி துறையால் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு ஊராட்சி நிலையான வளர்ச்சி அடைவதற்கு பல்வேறு இலக்குகளை அரசு நிர்ணயம் செய்துள்ளது. அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட இலக்குகள், புதியதாக உருவாக்கப்படவுள்ள ஊராட்சி வளர்ச்சி திட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டு, அந்த இலக்குகளை அடைவதற்கான செயல்பாடுகள் மக்களின் பங்கேற்போடு செயல்முறைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஊராட்சிக்கான திட்டம் தீட்டுவதில் அந்தந்த ஊராட்சிகளைச் சேர்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தீவிரமாக பங்கேற்று, ஊராட்சியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் வழிகோல வேண்டும். குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நட்பாகவும், பாதுகாப்பாகவும் விளங்கும் ஊராட்சியாக மாற்றுவதற்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும். ஒரு நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு திட்டமிடும்பொழுது அனைத்து திட்ட செயல்பாடுகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பது அனைத்து நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானமாகும்.

எனவே, உயர் கல்வி கற்பதற்கும், தொழில் திறன் பயிற்சிகள் பெறுவதற்கும், பணிகளில் அமர்த்துவதற்கும், சுகாதாரத் திட்டங்களை பெறுவதற்கும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மிக முக்கிய தேவை ஊட்டச்சத்து மற்றும் சுகாதார மேம்பாடுமே ஆகும். இவைகளைப் பெற வேண்டுமெனில் மகளிர் குழுக்களில் உள்ள அனைவரும் கிராம வளர்ச்சி திட்டம் தீட்டுவதில் தங்கள் கருத்துக்களை உறுதியுடன் பதிவு செய்ய வேண்டும்.

ஊராட்சி வளர்ச்சிக்காகத் தீட்டப்படும் திட்டங்கள் அனைத்தும் கிராம சபையால் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்பது கட்டாயமான ஒன்று. எனவே, மகளிர் குழு உறுப்பினர்கள் அனைவரும் கிராம சபையில் கலந்து கொள்ளுங்கள்... உங்கள் கருத்துக்களை பதிவு செய்யுங்கள் என முற்றம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

குடியரசு தின விழாவில் அரசின் திட்டங்கள் குறித்த அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் மூன்றாம் இடத்தைப் பெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு கேடயம்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள், 26.01.2020 அன்று ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற தேநீர் விருந்தின்போது, குடியரசு தின விழாவில் அரசின் திட்டங்கள் குறித்த அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் மூன்றாம் இடத்தைப் பெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களுக்கு கேடயத்தினை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. ப. தனபால், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் திரு. அம்ரேஷ்வர் பிரதாப் சாஹி, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



ஒருங்கிணைந்த விபத்து மற்றும் வாழ்நாள் காப்பீட்டுத் திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் 31.01.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஒருங்கிணைந்த விபத்து மற்றும் வாழ்நாள் காப்பீட்டுத் திட்டம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே. பி. அன்பழகன், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. எஸ். கிருஷ்ணன், இ.ஆ.ப., வருவாய் நிர்வாக ஆணையர் / முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்ட இயக்குநர் டாக்டர் என். வெங்கடாசலம், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள், முன்னேற்றம் குறித்த பணி ஆய்வுக்கூட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள், முன்னேற்றம் குறித்த பணி ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 27-01-2020 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2019-20 தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அறிவித்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பின் மூலம் ரூ.12,500 கோடி வழங்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு குறித்தும், தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டத்தை நடப்பாண்டு முதல் அடுத்த 4 ஆண்டுகளுக்கு ரூ.210.27 கோடி மதிப்பீட்டில், கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களில் தலா 4 வட்டாரங்களில் செயல்படுத்துவது குறித்தும், ரூ.125 கோடி செலவில் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சிகள் வழங்குவது குறித்தும், தமிழ்நாடு கிராம வங்கியும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த வளாகம் அமைப்பதற்கு சேலத்தில் 2 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கீடு செய்யும் பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் 2019-20 மானியக் கோரிக்கையின் போது அறிவித்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 7,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10.5 கோடி மதிப்பில் குழு ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் ஆதார நிதியாக தற்போதுவரை வழங்கப்பட்டுள்ள நிதி குறித்தும், 17,900 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.89.5 கோடி மதிப்பில் குழு ஒன்றுக்கு ரூ50,000 முதல் ரூ.75,000 வரை வழங்கப்பட்டுள்ள சமுதாய முதலீட்டு நிதி குறித்தும், வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வறுமையைக் குறைத்திட ஏதுவாக ரூ.31.26 கோடி மதிப்பில் கூடுதலாக 65 வட்டாரங்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களை விரிவுபடுத்தி செயல்படுத்துவது குறித்தும், மகளிர் விவசாயிகளின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக ரூ.15 கோடி மதிப்பில் 1,000 உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் 60 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்கும் திட்டத்தின் நிலைப்பாடு குறித்தும், ரூ.2 கோடி மதிப்பில் இரண்டு லட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் ஊட்டச்சத்தினை மேம்படுத்திட அமைக்கப்படும் 'ஊட்டச்சத்து தோட்டம்' பணிகள் குறித்தும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் முன்மாதிரி நகர வாழ்வாதார மையங்கள் அமைக்கும் திட்டப்பணிகள் குறித்தும், ரூ.20 கோடி மதிப்பில் 1,000 தெருவோர வியாபாரிகளுக்கான ஒத்த தொழிலார்வக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் குழு கடனுதவி பெறவும், ரூ.25 கோடி மதிப்பில் 5,000 நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் தனிநபர் கடன் வழங்கும் திட்டம் குறித்தும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக கேட்டறிந்தார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள ஊரக மகளிருக்கான பயனுள்ள திட்டங்களை எவ்வித தொய்வும் இன்றி விரைந்து நிறைவேற்றிட வேண்டுமென இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் உத்தரவிட்டார்கள். இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் கூடுதல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன், திரு. ஜா. சம்பத், திரு. ஜே. கணேஷ் கண்ணா, திருமதி ஜி. சரஸ்வதி கணேசன், திரு. சி. கே. வீரணன், இணை இயக்குநர்கள், பொது மேலாளர் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு மிகை பற்றுடன் கூடிய கடன் அட்டை வழங்கும் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கமானது, நகர்ப்புற தெருவோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட சிறப்பு கவனம் செலுத்துகின்றது. அதன் ஒரு பகுதியாக 2019–20 ஆம் நிதியாண்டில் 7500 நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் ரூ. 25 கோடி தனிநபர் கடன் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு வங்கிகள் மூலம் மிகை பற்றுடன் கூடிய கடன் அட்டைகள் பெற்றுத் தரும் திட்டமானது தமிழகத்தில் முதற்கட்டமாக சென்னை, கோயம்புத்தூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் முன்மாதிரியாக செயல்படுத்தப்பட உள்ளது.

அதன் அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தெருவோர வியாபாரிகளுக்கு அறிமுகத் திட்டமாக மிகை பற்றுடன் கூடிய கடன் அட்டை வழங்கும் நிகழ்ச்சி 30.01.2020 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ. எஸ். மணியன் அவர்கள் முதற்கட்டமாக 6 தகுதியுள்ள தெருவோர வியாபாரிகளுக்கு ஐசிஐசிஐ வங்கி உதவியுடன் கடன் அட்டைகளையும், 2 தெருவோர வியாபாரிகளுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் உதவியுடன் தனிநபர் தொழில் கடனாக தலா ரூ. 50,000/–மும் வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது நாகப்பட்டினம் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர், உதவி திட்ட அலுவலர், ஐசிஐசிஐ வங்கியின் மண்டல மேலாளர், நாகப்பட்டினம் கிளை ஐசிஐசிஐ வங்கி மேலாளர் மற்றும் நாகப்பட்டினம் கிளை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாகப்பட்டினம் மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டம்

இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணியாற்ற பணி நியமன ஆணை வழங்குதல்

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு பணிவாய்ப்பு பெற்றுத் தரும் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் 08.02.2020 அன்று நடைபெற்றது. இம்முகாமில் 64 தனியார் தொழில் நிறுவனங்களும், வேலைவாய்ப்பு வேண்டி 2132 இளைஞர்களும் கலந்து கொண்டனர். தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கடம்பூர் ராஜூ அவர்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. ம. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு, தனியார் நிறுவனங்களில் பணி வாய்ப்பு பெற்ற 203க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

सत्यमेव जयते
Goverment Of India

வாய்மையே வெல்லும்

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டுதல்படி, தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் மீதான தேசிய அளவிலான கருத்தரங்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தை அடுத்த கோவளம் தாஜ் ஹோட்டலில் 2020 ஜனவரி 23 மற்றும் 24 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

தேசிய அளவிலான இக்கருத்தரங்கில் 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து முதன்மை செயல் அலுவலர்கள், முதன்மை இயக்கு அலுவலர்கள் மற்றும் மாநில திட்ட மேலாளர்கள் என சுமார் 90 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்களின் வரவேற்புரையுடன் துவங்கிய இக்கருத்தரங்கினை, மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் செயலாளர் திருமதி. அல்கா உபாத்யாயா, இ.ஆ.ப., அவர்களும், தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களும், மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் இணை செயலாளர் (திறன் வளர்ப்பு) திரு. சரண்ஜித் சிங், இ.வ.ப., அவர்களும், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., அவர்களும் இணைந்து துவக்கி வைத்து சிறப்பித்தனர்.

சி.ஐ.ஐ. நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. ரங்கநாத் அவர்கள் "திறன் பயிற்சியின் மீது தொழில் நிறுவனங்களின் பார்வை" என்ற தலைப்பில் திறன் வளர்ப்பின் அவசியம் குறித்து அறிமுக உரை நிகழ்த்தினார். தொடர்ந்து, தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, "தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் (RSETI) ஆகிய திட்டங்கள் இளைஞர்களின் திறன் வளர்ப்பிற்கும், இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து வதிலும் பெரும்பங்கு வகிப்பதாக கூறியதுடன், கிரிஷ்சி விக்யான்

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ்

தேசிய அளவிலான கருத்தரங்கு

கேந்திரா (KVK) போன்ற நிறுவனங்கள் விவசாயம் சார்ந்த தொழிற்ப யிற்சிகள் அளித்திட முனைப்பு காட்ட வேண்டும்" எனவும், "தொழில் நிறுவனங்கள் கிராமப் பகுதிகளை நோக்கிப் பயணிக்க வேண்டும்" எனவும் வலியுறுத்தினார்.

மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் கூடுதல் செயலாளர் திருமதி. அல்கா உபாத்யாயா, இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, "தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டம் மத்திய அரசின் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகக் கருதப்படுகிறது என்றும், வேறு எந்த ஒரு திட்டத்திலும் இல்லாத சிறப்பம்சங்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப் படுவதாகவும், இத்திட்டம் தமிழகத்தில் பல்வேறு புதிய முயற்சிகளுடன் முன்மாதிரி மாநிலமாக செயல்படுவதாகவும்" பாராட்டினார்கள்.

மேலும் மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் இணை செயலாளர் (திறன் வளர்ப்பு) திரு. சரண்ஜித் சிங், இ.வ.ப., அவர்கள் பேசும்போது, "இக்கருத்தரங்கின் மூலம் கிடைக்கப்பெறும் பரிந்துரைகள் வருங்கால திட்ட செயலாகத்திற்கு அடிப்படையாக அமையும் எனவும், கிராமப்புற இளைஞர்களுக்கு முறையான ஆற்றுப்படுத்துதல் (Counselling) அளிப்பதன் மூலம் அவர்களுக்கு நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்த முடியும்" எனவும் விளக்கினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் "கிரிஷ்சி விக்யான் கேந்திரா(KVK) நிறுவனங்களுடன் திறன் வளர்ப்புப் பயிற்சிக்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்" எனும் தலைப்பில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இயக்குனர் டாக்டர். ஜவகர் அவர்களும், புதியதாகத் துவக்கப்பட்டுள்ள "உன்னத்தி" எனும் திட்டம் குறித்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGA) இயக்குநர் அவர்களும் விளக்கிப் பேசினார்கள்.

பின்னர் மாநில வாரியாக "தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டப் பணிகளின் 2019-2020 ஆம் ஆண்டிற்கான முன்னேற்றம் குறித்தும், 2020-2021ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் மற்றும் புதிய உத்திகள் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து சாகர்மாலா திட்டத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பற்றி மத்திய கப்பல்

போக்குவரத்து துறையின் ஆலோசகர் திரு. சாரதா பிரசாத், இ.ஆ.ப., (பணி நிறைவு), அவர்கள் விவரித்து பேசினார்.

பின்னர் நிகழ்ச்சியின் பங்கேற்பாளர்கள், தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்திற்காக மேற்கொள்ளப்படும் இளைஞர் ஒருங்கிணைப்புப் பணிகளை பார்வையிட, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், தண்டலம் மற்றும் செம்பாக்கம் ஆகிய இரு கிராமங்களுக்கு இரு குழுவாக களப்பயணம் அழைத்துச் செல்லப்பட்டனர். இக்களப்பயணத்தின்போது, இளைஞர்கள், திட்டப் பணியாளர்கள் மற்றும் சமூக வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. முன்னதாக காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சீனிவாச ராவ் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசியதுடன், முகாம் குறித்தும் அறிமுக உரை நிகழ்த்தினார்.

இம் முகாமில், 21 முன்னணி தொழில் பயிற்சி நிறுவனங்கள் கலந்து கொண்டதுடன், சுமார் 600க்கும் மேற்பட்ட இளைஞர்களும் கலந்து கொண்டு, தாங்கள் விருப்பப்படி DDU-GKY தொழில் பயிற்சிகளை தேர்வு செய்தனர்.

நிறைவாக, தமிழகத்தின் பண்டைய வரலாறு, கலை, நாகரீகம் ஆகியவற்றை பறைசாற்றும் வகையில் அமைந்துள்ள மாமல்லபுரம் குகைக் கோவில்கள், பாறைச் சிற்பங்கள் மற்றும் கடற்கரை கோவில் ஆகிய புராதன சின்னங்களை களப் பயண குழுவினர் பார்வையிட்டனர்.

இச்சிறப்புமிகு நிகழ்விற்கான ஏற்பாடுகளை தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் முதன்மை இயக்கு அலுவலர் / கூடுதல் இயக்குநர் திரு. ஜெ.கணேஷ் கண்ணா, மத்திய ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் திரு. டான்மாய், திரு. வினய் பாண்டே, DDU-GKY திட்டத்தின் இணை இயக்குநர் திருமதி. கவிதப் பிரியா, மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், தொழில்நுட்ப நிறுவனத்தின் திட்ட மேலாளர் திரு. பத்மநாபன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், TSA அலுவலர்கள் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக செயல்படுத்தப்பட்ட முக்கிய நிகழ்வுகள்

- **தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் பயிற்சி முடித்த 15 இளைஞர்களுக்கு கத்தார் நாட்டில் பணிபுரிவதற்கான பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.**
- **ஆடை வடிவமைப்பு, தோல், ஊடகம் (ம) பொழுதுபோக்கு மற்றும் மின்னணுவியல் ஆகிய திறன் பிரிவு குழுமங்களுடன் (Skill Sector Councils) திறன் வளர்ப்பு பயிற்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**
- **தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தில் பயிற்சி பெற்ற 40 இளைஞர்களுக்கு பெரும் தனியார் நிறுவனங்களில் குறைந்தது ரூ. 15,000/-மாத ஊதியத்தில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.**
- **இளைஞர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் அழைப்பு மையம் ஆகிய பணிகள் குறித்து ஒலி-ஒளி குறும்படம் வெளியிடப்பட்டது.**

சுவையும் சத்தும் நிறைந்த கொள்ளு சாதம்

நம் உடலுக்குத் தேவையான சத்தினை தருவது உணவாகும். சுவையும் சத்தும் மிகுந்த உணவுகளை அனைவரும் விரும்பிச் சாப்பிடுவார்கள்.

தேவையானவை :

பொன்னி அரிசி –200 கிராம், கொள்ளு –50 கிராம், கடுகு, உளுந்து –தலா ஒரு டீஸ்பூன், மஞ்சள்தூள், கறிவேப்பிலை –சிறிதளவு, நல்லெண்ணெய் –4 டீஸ்பூன், உப்பு –தேவைக்கேற்ப

அரைக்க :

சீரகம் –ஒரு டீஸ்பூன், மிளகு –அரை டீஸ்பூன், சின்ன வெங்காயம் –6 (தோலுரிக்கவும்), கொத்தமல்லித் தழை, கறிவேப்பிலை –சிறிதளவு, பச்சை மிளகாய் –2, பூண்டு –6 பல்

செய்முறை :

கொள்ளுவை அரை மணி நேரம் ஊற வைத்து, குக்கரில் போட்டு அடுப்பில் வைத்து இரண்டு விசில் வந்ததும் இறக்கி வைக்கவும். குக்கரில் உள்ள தண்ணீரை வடிகட்டி தனியாக எடுத்து வைக்கவும். அரிசியை 15 நிமிடங்கள் ஊற விட்டுக் களையவும். அரைக்கக் கொடுத்துள்ள பொருட்களை ஒன்றிரண்டாக அரைத்து வைத்துக் கொள்ளவும். பிறகு குக்கரை அடுப்பில் வைத்து சிறிது எண்ணெய் விட்டு கடுகு, உளுந்து, கறிவேப்பிலை ஆகியவற்றை தாளித்து, அதனுடன் அரைத்த பொருள்களையும் சேர்த்து நன்கு வதக்கவும். வதங்கிய கலவையில் மஞ்சள் தூள், உப்பு, வேக வைத்த கொள்ளு ஆகியவற்றை சேர்க்கவும். பிறகு தேவையான அளவு தண்ணீர் ஊற்றும் போது கொள்ளு வேக வைத்த தண்ணீரையும் அளந்து ஊற்றிக் கொதிக்க விடவும். ஒரு கொதி வரும்போது வரும்போது களைந்து வைத்துள்ள அரிசியைச் சேர்த்து நன்கு வேக விட்டு இறக்கவும். சுவையான கமகம கொள்ளு சாதம் ரெடி. சுவையான இந்த கொள்ளு சாதத்தை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள்.

குறிப்பு: ஒரு பங்கு அரிசிக்கு மூன்று பங்கு தண்ணீர் விடலாம். விருப்பப்பட்டால் இறக்கியவுடன் ஒரு டீஸ்பூன் நெய் சேர்த்துப் புரட்டலாம்.

எளிதாக கிடைக்கும் வெற்றிலையில் உள்ள மருத்துவ குணங்கள்...!

வெற்றிலையில் கல்சியம், இரும்புச்சத்து, வைட்டமின் ‘சி’ போன்றவை அதிகம் உள்ளன. வைட்டமின்களுடன், நார்ச்சத்தும் இருப்பதால் சீதள நோய்களை நீக்கி, உடல் இறுக்கம், குடல் புண்கள் போன்றவற்றை குணப்படுத்துகிறது.

வெற்றிலையானது நச்சுக்களை வெளியேற்றும் தன்மை கொண்டது. புற்றுநோய்களில் இருந்து உடலை பாதுகாக்கிறது. அஜீரணத்தை நீக்கி செரிமானத்தை தூண்டுகிறது. உடலுக்கு வெப்பம் தரும் வெற்றிலையானது, தாய்ப்பால் சுரப்பியாகவும், வாய்நாற்றத்தை போக்கும் தன்மையும் கொண்டுள்ளது.

வெற்றிலையை மெல்லுவதினால், ஈறுகளில் இருக்கின்ற வலி, இரத்த கசிவு ஆகியவற்றை நீக்கி, ஆட்டம் காணும் பற்களையும் கெட்டியாக பிடிக்கும் நிலைக்கு ஈறுகளை தயார் செய்கிறது.

வெற்றிலை வயிற்றில் இருக்கும் வாயுவை வெளித்தள்ளும் தன்மை கொண்டது. மூளை, இதயம், கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றை பலப்படுத்தி ஆரோக்கியத்தை தரக்கூடியது. நரம்பு மண்டலத்துக்கு பலம் கொடுப்பதால் படிக்கும் குழந்தைகளுக்கு வெற்றிலை சாறு கொடுத்து வர ஞாபக சக்தியை அதிகரிக்கும்.

அளவோடு வெற்றிலை சாப்பிட்டு வந்தால், ஆண்மை குறைபாடு நீங்கும். வாய் துர்நாற்றத்தை போக்கும். வெற்றிலை சாற்றுடன் தேவையான அளவு நீர் மற்றும் பால் கலந்து பருகி வந்தால், சிறுநீர் நன்றாகப் பிரியும்.

கடுகு எண்ணெயில் வெற்றிலையை போட்டு சூடுபடுத்தி ஒரு துணியில் வைத்து மார்பில் கட்டினால், மூச்சுத்திணறல் மற்றும் இருமல் கட்டுப்படும். இதன் இலை சாற்றுடன் கஸ்தூரி அல்லது கோரோசனை சேர்த்து, தேன் கலந்து கொடுத்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, இருமல் போன்றவை குணமாகும்.

ஈரோடு மாவட்டம்

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம்

ஈரோடு மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில், தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் கீழ், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் கடந்த 01.02.2020 அன்று ஈரோடு மாவட்டம், திண்டலில் உள்ள ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமினை, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. எஸ். தென்னரசு அவர்கள் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் முனைவர். மு. பாலகணேஷ், கல்லூரி செயலாளர், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இம்முகாமில் 31 பல்வேறு தனியார் நிறுவனங்கள் பங்கேற்றன. ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளிலிருந்து, 1865 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டனர். இதில் தேர்வு செய்யப்பட்ட 942 இளைஞர்களுக்கு ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

PRESS & REGISTRATION OF BOOKS ACT
Registration of News papers (Control) Rules 1957
FORM IV 9 (SEE RULE 8) Statement about ownership Particulars of
TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM

1. Place of Publication : **MUTRAM SOCIETY**
Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvar kottam High Road,
Nungambakkam, Chennai – 600 034.

2. Periodicity of its publication : Monthly

3. Printer's Name : **V. RAMESH**
Nationality : Indian
Full Address : **CHENNAI MICRO PRINT PRIVATE LTD,**
New No. 130 - Old No.34, Nelson Manickam Road,
Aminjikarai, Chennai – 600 029.

4. Publisher's Name : **S.CHINNAPPAN.**
Nationality : Indian
Full Address : Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvar kottam High Road,
Nungambakkam, Chennai – 600 034.

5.Editor's Name : **S.CHINNAPPAN.**
Nationality : Indian
Full Address : Tamil Nadu Corporation for Development of Women Ltd,
Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai – 600 034

6. Owner's Name : **MUTRAM SOCIETY**
Representated by its Secretary
S.Chinnappan.

I, S.CHINNAPPAN, hereby that the particulars given adove are true to the best of my knowledge.

Chennai - 600 034.
Date : 14.02.2020.

(S.CHINNAPPAN)
Signature Publisher

சுற்றுலாத் தல தொழில் மேம்பாடு குறித்த கருத்து கேட்பு கூட்டம்

EDI - நிறுவனத்தின் மூலம் சுற்றுலா தொழில் வாய்ப்பு மற்றும் இதர சிறு, குறு தொழில் வாய்ப்பு விழிப்புணர்வு குறித்த ஒருநாள் கருத்தரங்கு மதுரை மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் 09.01.2020 அன்று நடைபெற்றது. இதில் நகர்ப்புற மற்றும் கிராமப்புறத்தில் உள்ள சுயமாக தொழில் புரியும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 100 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கூடுதல் இயக்குநர் திருமதி. சஜீவனா அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். இக்கருத்தரங்கில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் EDI நிறுவன அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் மாவட்டம்

மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்

விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டு மையம் ஆகியவை இணைந்து, இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாமை விழுப்புரம் A.K.T. கல்லூரி வளாகத்தில் 25.01.2020 அன்று நடத்தின. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., அவர்கள் தலைமை ஏற்று இம்முகாமைத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். கள்ளக்குறிச்சி மாவட்ட சார் ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. ச. சங்கீதா, விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. ஈஸ்வரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. வெ. மகேந்திரன், விழுப்புரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் திரு. தி. பாலமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில் 56 தொழில் நிறுவனங்களும், 3008 வேலை தேடுபவர்களும் கலந்து கொண்டதில், 1126 நபர்கள் பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணிவாய்ப்பிற்குத் தேர்வு செய்யப்பட்டு, அவர்களில் 847 நபர்களுக்கு அன்றைய தினமே பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

முகாமிற்கான ஏற்பாடுகளை மகளிர் திட்டத்தின் உதவி திட்ட அலுவலர்கள் திருமதி. வெ. சித்ரா, திரு. அ. முத்துபாண்டியன், திரு. கு. முனியப்பன், திரு. வி. முருகானந்தம், திரு. எம். மாரீஸ்வரன், மகளிர் திட்டத்தின் பணியாளர்கள், களப்பணியாளர்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினரும் மேற்கொண்டனர். உதவித் திட்ட அலுவலர் திரு. தா. சத்தியமூர்த்தி நன்றியுரை நல்கினார்.

அரியலூர் மாவட்டம்

சமுதாய வள பயிற்றுநர்களுக்கு நிதி மேலாண்மை பயிற்சி

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சமுதாய வளப் பயிற்றுனர்களுக்கு நிதி மேலாண்மை பயிற்சி, கீழப்பழூர் கிராமத்திலுள்ள பாரத ஸ்டேட் வங்கி ஊரக சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனம் சார்பில் நடைபெற்றது. இப் பயிற்சியின் நிறைவு நாளன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், அரியலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. D.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில், மத்திய மற்றும் மாநில அரசின் சமூக நலத் திட்டங்கள், வங்கிகளின் சேமிப்பு திட்டங்கள் குறித்து கிராமப்புற ஏழை மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில் தகுதியான சமுதாய வள பயிற்றுநர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நிதி மேலாண்மை குறித்த பயிற்சியை அளித்து அவர்களை கொண்டு கிராமப்புற மக்களுக்கு நிதி மேலாண்மை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இப்பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக 35 சமுதாய வள பயிற்றுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு 6 நாட்கள் பயிற்சி வழங்கியதுடன், இந்த பயிற்சி எளிமையாக இருக்க வேண்டும் என்பதற்காக விளையாட்டுகளை உள்ளடக்கிய கற்றல் முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் ரூ.2900/- மதிப்பிலான கற்றல் உபகரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த உபகரணங்களை சீரிய முறையில் பயன்படுத்தி மத்திய மற்றும் மாநில அரசின் சமூக நலத் திட்டங்கள், வங்கிகளின் சேமிப்பு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் ம. ஜெயராமன், மேலாளர் திரு. வேலுமணி, உதவித் திட்ட அலுவலர்கள் திரு. பெ. வெங்கடேசன், திரு. எஸ். சிவக்குமார் மற்றும் மகளிர் திட்ட பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள் ஒருங்கிணைப்பு முகாம்

தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் மூலமாக வேலைவாய்ப்புடன் கூடிய திறன் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுவது குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு செங்கல்பட்டு மாவட்டம், மகாபலிபுரத்தை அடுத்த கோவளம் தாஜ் ஹோட்டலில் 23.01.2020 மற்றும் 24.01.2020 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் இரண்டாம் நாளன்று திருப்போரூர் ஒன்றியம் செம்பாக்கம் மற்றும் தண்டலம் ஊராட்சிகளில் நடைபெற்ற இளைஞர்கள் ஒருங்கிணைப்பு முகாமினை அனைத்து மாநில முதன்மை செயல் அலுவலர்கள் நேரில் பார்வையிட்டு தமிழகத்தில் இளைஞர்கள் ஒருங்கிணைப்பு மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் சிறப்பாக செயல்பட்டு முதலிடம் வகிப்பதை கலந்துரையாடல் மூலமாக கேட்டறிந்தனர். இம்முகாமில் காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாசராவ், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. தி. ஸ்ரீதர், தலைமை அலுவலக திட்ட மேலாளர் திரு. குமரன் மற்றும் மண்டல மேலாளர் திரு. கர்ணன், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மகளிர் திட்ட வட்டார மேலாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்டம்

சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு பேரணி

31வது சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்டுவதின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் வலியுறுத்தும் விதமாக விருதுநகர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்தில் 20.01.2020 அன்று நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியினை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களும், விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பூ. பெருமாள் அவர்களும் கொடியசைத்து துவக்கி வைத்தனர். இந்த விழிப்புணர்வு பேரணியில் பெண் காவலர்கள் மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (ம) கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தில் உள்ள 100–க்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டு, தலைகவசம் அணிவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான இருசக்கர வாகன பேரணியை நகரின் முக்கிய பகுதிகளில் மேற்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் விருதுநகர் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. சிவபிரசாத், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு. இரா. தெய்வேந்திரன் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம்

தூத்துக்குடி மாவட்டம்

அம்மா இருசக்கர வாகன மானியம், சுழல் நிதி மற்றும் நேரடிக் கடன் வழங்குதல்

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரியில் 26.01.2020 அன்று மாவட்ட ஆட்சியர் டாக்டர் விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குடியரசு தின விழா நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக 75 பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகன மானியமாக ரூ. 18.75 இலட்சமும், 106 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ. 10.60 இலட்சமும், 48 பயனாளிகளுக்கு நேரடி கடனாக ரூ. 25.75 இலட்சமும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திரு. ரெ. கோமகன், உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறுத் துறை அரசு அலுவலர்கள், மகளிர் திட்டப் பணியாளர்கள், வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், சுய உதவிக் குழுவினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கல்லூரி சந்தை

தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், தூத்துக்குடி தூய மரியன்னை மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்தப் பொருட்களை விற்பனை செய்யும் கல்லூரி சந்தையினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். சார் ஆட்சியர் திரு. சிம்ரான் ஜித்சிங் கலோன், மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, கல்லூரி முதல்வர் திருமதி. லூசியா ரோஸ், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், கல்லூரி மாணவியர் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

22.01.2020 முதல் 24.01.2020 வரை மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கல்லூரிச் சந்தையில் அமைக்கப்பட்டிருந்த 35 அரங்குகளில் மகளிர் சுய உதவிக் குழுவினர் தயாரித்த செயற்கை நகைகள், பனை ஓலை பொருட்கள், சணல் பைகள், காகித பொருட்கள், மரத்திலான பொருட்கள், மண் பொருட்கள், சங்கு பொருட்கள், சிப்பி பொருட்கள்; கீ செயின், ஆடை வகைகள் மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

தனியார் நிறுவனங்களில் பணிவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், தனியார் நிறுவனங்களில் இலால்குடி மற்றும் புள்ளம்பாடி பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம், 25.01.2020 அன்று இலால்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பட்டது.

இந்த வேலை வாய்ப்பு முகாமில் கணினி துறை, கட்டுமானத்துறை, ஹோட்டல், விளம்பரங்கள் துறை, ஆயத்த ஆடை நிறுவனங்கள், காப்பீடு நிறுவனங்கள் என பல்வேறு துறைகளைச் சார்ந்த 42 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றனர். வேலைவாய்ப்பு வேண்டி கலந்து கொண்ட 1142 இளைஞர்களில் 321 நபர்கள் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. நா. சரவணன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், உதவித் திட்ட அலுவலர் திரு. ஆ. ஜான்பால் அந்தோணி, வட்டார இயக்க மேலாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம்

பழங்குடியினர் கா:பி விற்பனை

நீலகிரி மாவட்டத்திலுள்ள பழங்குடியினர் தங்கள் விளை நிலங்களில் விளைவிக்கின்ற காபி, மிளகு மற்றும் வனப் பகுதிகளில் சேகரிக்கின்ற தேன் முதலியவற்றை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் நல்ல விலைக்கு கொள்முதல் செய்து மதிப்பு கூட்டுதல் செய்து தோட்டகலை துறையின் மூலம் விற்பனை செய்கின்றனர். இதன் மூலம் இடைத்தரகர்கள் யாருமின்றி பழங்குடியினர் தங்கள் உற்பத்தி பொருட்களை நேரடி விற்பனை மூலம் அவர்களது பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்படுகிறது இதன் முதல் கட்டமாக நீல் கஃஃபே (neel cafe) என்ற பெயரில் 26.01.2020 அன்று நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. இன்னொசன்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் அறிமுகப்படுத்தினார். இந்த நீல் கபேவினை தமிழ்நாடு தோட்டக்கலை துறையின் டேன் கோடா விற்பனை மையம், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார திட்ட வணிக வளாகம் மற்றும் மகளிர் அங்காடிகள் ஆகியவற்றில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம்

கல்லூரிச் சந்தை

திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், புதுப்பாளையம் இதயா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 28.01.2020 முதல் 29.01.2020 வரை நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் கல்லூரி சந்தையினை திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இவ்விழாவில்; கல்லூரி முதல்வர், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் ஏராளமான கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இந்த கல்லூரிச் சந்தையில் திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து 40 மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான பெண்களுக்கான ஆபரணங்கள், கைவினைப் பொருட்கள், மரப் பொம்மைகள், பாரம்பரிய உணவுப் பொருட்கள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டம்

பெண்களுக்கு இ-ஆட்டோ ஓட்டுனர் பயிற்சி

திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்டம் மூலம் பெண்களுக்கு இதுவரை தையல் பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது புதிய முயற்சியாக இ-ஆட்டோ வாகன ஓட்டுனர் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை நகராட்சி, ராமலிங்கனார் பிரதான சாலையில் அமைந்துள்ள இந்தியன் வங்கி சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் 21.01.2020 முதல் 24.02.2020 வரை 30 நாட்களுக்கு 35 மகளிருக்கு வாகன ஓட்டுனர் பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியினை 21.01.2020 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு. ஏ. ராஜாராமன், துணை மண்டல மேலாளர் திரு. எம். சுப்பிரமணியன், திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. எஸ். இளவரசு, பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் பயிற்சி பெறும் மகளிர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்குதல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 26.01.2020 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் 30 பயனாளிகளுக்கு மானிய விலையிலான அம்மா இருசக்கர வாகனங்களை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மரு. சு. பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் மேம்பாடு

மண்ணின் வைரங்கள் எத்தனை கோடி...!
மருண்ட மகளிர் பலகாலும் அதனை நாடி...!
செல்வச் செழுமைதனில் எங்களின் பூமி...!
சேருமிடமே மங்கையரின் மனமே தான் எங்களின் சாமி...!
பலவற்றை பயிற்றுவிக்கும் மகளிர் நல மேம்பாடு...!
பங்கைய நலம் பெறவே பட்டொளி வீசி
பறக்கட்டும் தமிழின பண்பாடு...!!

• **திருமதி. சரஸ்வதி கணேசன்,**
கூடுதல் இயக்குநர்/திறன் வளர்ப்பு
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

நெகிழிக்கு மாற்றாக மக்காச்சோளப் பைகள் விற்பனை மையம்

வேலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக நெகிழிப் பைகளுக்கு மாற்றாக நூறு சதவீதம் மக்கும் தன்மையுடைய மக்காச்சோளத்தால் தயாரிக்கப்பட்ட பைகள் விற்பனை மையத்தை 20.01.2020 அன்று வேலூர், அண்ணாசாலையிலுள்ள பூமாலை வணிக வளாகத்தில் வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப. அவர்கள் தொடக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திரு. சிவராமன், உதவி திட்ட அலுவலர் திரு. ஜெயகாந்தன், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்க மேலாளர் திரு. ரூபன் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ஒருமுறை பயன்படுத்தக் கூடிய நெகிழிப் பைகளின் பயன்பாட்டுக்கு தமிழக அரசு முற்றிலும் தடை விதித்துள்ளதை அடுத்து, அவற்றுக்கு மாற்றாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் மக்காச் சோளத்தை கொண்டு பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நூறு சதவீதம் மக்கும் தன்மையுடைய இந்த வகை பைகளை மண்ணில் போட்டால் 6 மாதத்தில் மக்கிவிடும். இத்தகைய மக்காச்சோளப் பைகளை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நேரடியாக விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்களுக்கு இணையாக பெண்களும் தங்கள் உரிமைகளைக் கேட்டு போராடியதை குறிப்பிடத்தான் சர்வதேச மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 8ம் தேதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையினால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த தினத்தினை உலகத்தின் பல நாடுகள் விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தியுள்ளன.

இனம், மொழி, கலாசாரம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பல்வேறு வேறுபாடுகளை மறந்து பெண்கள் தினம் அனைத்து பெண்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தினத்தில் பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்காமல் சாதனைகளை கொண்டாடும் வகையிலும் கடைபிடிக்க வேண்டும். இக்கொண்டாட்டங்களில் குறிப்பாக உலகம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கும் ஆக்கபூர்வமான பெண்ணினவாதச் செயற்பாட்டாளர்கள் தனியாகவும், குழுக்களாகவும் அமைப்புக்கள் சார்ந்தும், அக்கபூர்வமான செயல்வாதங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மகளிர் தினத்தின் சுருக்க வரலாறு : வரலாற்றுக் காலம் முதல் பெண்கள் அடிமைகளாகவும், உரிமையற்றவர்களாகவும் காணப்பட்ட நிலையிலிருந்து படிப்படியாக மீண்ட நிலை இந்நிகழ்வின் பின்னணிக்கு அடிப்படையாக அமைகின்றது. 1789ம் ஆண்டு ஜூன் 14ம் தேதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் (அரசனின் ஆலோசனைக் குழுக்களில்) என்று கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப் புரட்சியின்போது பாரீஸில் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராக பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் வேண்டும் என்றும் வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணி நேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்று பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்!.

ஆர்ப்பாட்டக்காரர்களைச் சமாதானம் செய்து, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக மன்னர் வாக்களித்தார். ஆனால், அது அவரால் இயலாமற்போகவே மன்னன் லூயிஸ் முடிதுறந்தார். இதனால் ஐரோப்பிய நாடுகளிலுள்ள பெண்களும் கிளர்ச்சியை ஆரம்பித்தனர். இக்கட்டத்தில் இத்தாலியிலும் பெண்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முயன்று தங்களுக்கு வாக்குரிமை கேட்டுப் போராட ஆரம்பித்தனர்.

பிரான்ஸ் நாட்டில் புருஸ்லியனில் 2வது குடியரசை நிறுவிய லூயிஸ் ப்ளாங்க், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கவும், அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடமளிக்கவும் ஒப்புதல் அளித்தார். அந்த நாள் மார்ச் 8, 1848 ஆகும். உலகப் பெண்களின் போராட்டங்களுக்கு வெற்றி கிடைத்த அந்த நாளே, மகளிர் தினமாக அமைய அடிப்படை வித்தாக அமைந்தது!.

1857ல் நியூயார்க்கில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள் தோன்றி, போராட்டங்கள் ஆரம்பமாகியிருந்தன. உலக நாடுகள் அனைத்திலும் பரவிய இப்போராட்டங்களின் விளைவாக, 1910ல் பணிக்குச் செல்லும் பெண்களுக்கான சர்வதேச மாநாடு கோபன்ஹேகனில் நடைபெற்றது. இம்மாநாட்டில் ஜெர்மனியின் சோசலிச ஜனநாயக கட்சியின் மகளிர் அணித்தலைவியான க்ளாரா ஜெட்கின் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடும் ஒரு யோசனையை முன்வைத்தார்.

பெண்கள் தங்கள் உரிமைகளைக் கோர சர்வதேசம் முழுதும் ஒரு தினத்தை மகளிர் தினமாகக் கொண்டாட வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார். 17 நாடுகளிலிருந்து அந்த மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் அந்தத் திட்டத்தை ஏகமனதாக வரவேற்றனர். இதைத் தொடர்ந்து 1911ஆம் ஆண்டில் க்ளாரா ஜெட்கினால் 19 மார்ச்சில் சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1911ல் சர்வதேச மகளிர் தினத்திற்கு கிடைத்த வெற்றி எட்டுத் திக்கிலும் பரவியது. அந்த வெற்றியைத் தொடர்ந்து 1848ல் பிரான்ஸ் மன்னர் ப்ளாங்க், பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புக்கொண்ட நாளான மார்ச் 8-ஐ, நினைவுகூரும் வகையில், 1913 முதல் மகளிர் தினத்தை மார்ச் 8க்கு மாற்றியமைத்தது.

ஆனாலும் அது அதிகாரப்பூர்வமானதாக இருக்கவில்லை. இது குறித்து 1917 மார்ச் 8ம் தேதி ரஷ்யாவில் உள்ள சென்பீட்டர்ஸ் நகரில் ஒரு போராட்டம் நடத்தப்பட்டது. இப் போராட்டத்தில் அலெக்ஸ்சாண்ட்ரா கொலன்றா என்ற ரஷ்யப் பெண்ணினவாதியும் கலந்து கொண்டார். இப்போராட்டத்தையடுத்து 1921ம் ஆண்டு மார்ச் 8ம் தேதியே சர்வதேச பெண்கள் தினமாக அதிகரா ரப்பூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மார்ச் 8ம் தேதி சர்வதேசப் பெண்கள் தினமாக கடைபிடிக்கப்பட்டு சம உரிமைகளுக்கான பெண்களது போராட்டம் தொடர்கிறது. ஐ.நாவும் பெண்கள் முன்னேற்றத்துக்காவும் அவர்கள் சமத்துவ கோரிக்கைகளுக்காவும் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. 1945ல் சான்பிரான்ஸ்கோவில் நடந்த உடன்பாட்டின்படி பெண்களுக்கு சம உரிமை என்பது அடைப்படை உரிமையாக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான சர்வதேச கொள்கைகள், வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் திட்டங்கள், இலட்சியங்கள் உள்ளிட்டவற்றை மேம்படுத்த ஐக்கிய நாடு உழைத்துள்ளது.

பெண்மையைப் போற்றுவோம்..!

1975ம் ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக ஐக்கிய நாடு அறிவித்தது. 1977ல் ஐக்கிய நாடு பொதுச் சபையில் சர்வதேச பெண்கள் தினத்தை ஐக்கிய நாடு பெண்கள் தினமாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது. அதே ஆண்டு பெண்கள் மாநாட்டுக்கும் ஐக்கிய நாடு ஏற்பாடு செய்தது. சர்வதேச அளவில் பெண்கள் தினம் கடை பிடிக்கப்பட்டதை அடுத்து பெண்கள் நலன் குறித்து சர்வதேச மாநாடுகளுக்கு அது ஊக்குவித்தது.

சர்வதேசப் பெண்கள் தினம் சாதாரண பெண்ணிற்கு தைரியம் அளித்து சாதனை படைக்கும் பெண்ணாக வரலாற்றில் உரிமை கோரும் பெண்ணாக உயர்த்தியது.

இன்று ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் நாளன்று உலக மகளிர் தினம் உலகின் பல நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. நவீன உலகில் இந்த நாள் பெண்களின் சாதனைகளுக்குப் பாராட்டு தெரிவிக்கும் விதமாக (அவர்களின் நாடு, சம்பிரதாயம், மரபு, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமையைக் கருத்தில் எடுத்துக் கொள்ளாமல்) கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆண்கள் தங்களது வாழ்க்கையில் சார்ந்த பெண்களுக்கு- தாயார், மனைவி, தோழி, சகோதரி, மகள் போன்றவர்களுக்கு பரிசுகள் அளித்து கொண்டாடுவார்கள். சில நாடுகளில் அன்னையர் தினத்திற்கு சமமாக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு, குழந்தைகள் தங்களது தாய், பாட்டி போன்றவர்களுக்கு பரிசுகள் அளித்து மகிழ்வார்கள்.

சில நாடுகளில் மகளிர் தினத்தன்று தொழில் நிறுவனங்கள் தங்களது நிறுவனத்தில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு பரிசுகளை வழங்குகின்றனர். சில நாடுகளில் பள்ளிக் குழந்தைகள் தங்களது ஆசிரியைகளுக்கு பரிசுகள் வழங்குவர். பொது விருந்துகள் மற்றும் கொண்டாட்டங்களும் இத்தினத்தன்று சில நாடுகளில் நடைபெறுவதுண்டு.

நம் நாட்டில் மகளிர் தினம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மகளிர் தினத்தன்று பல்வேறு கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. நவீன உலகில் மகளிர் சக்தியையும், சமூகத்தில் அவர்களது முக்கிய பங்கையும் மகளிர் தினத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த நூற்றாண்டில் பல்வேறு நாடுகளிலும் உயர்ந்த தலைமைப் பதவிகளில் பெண்கள் சாதித்து வருவதை நாம் காண்கிறோம். ஆணுக்கு நிகராகத் தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு பெண்ணும் தனக்குள் ஒளிந்திருக்கும் தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து, சாதனைகள் பல புரிந்திட சர்வதேச மகளிர் தினத்தன்று பெண்கள் உறுதியினை ஏற்க வேண்டும்.

அனைத்து மகளிருக்கும் மகளிர் தின வாழ்த்துகளை முற்றம் இதழ் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிடல்

தமிழ்நாட்டில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணைச் செயலர் திரு. சஞ்சய் குமார், இ.ஆ.ப., அவர்கள், 25.01.2020 அன்று கோயமுத்தூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்தார்.

ஆய்வின் முதற்கட்டமாக, புதுப்புதூரில் செயல்பட்டு வரும் கனரா வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி (RESTI) மையத்திற்கு வருகை தந்த இணை இயக்குநர் அவர்கள், அங்கு நடைபெறும் வங்கித் தொடர்பாளர் பயிற்சியினைப் பார்வையிட்டு, அங்கு பயிற்சி பெற்று வரும் பயிற்சியாளர்களிடம் கலந்துரையாடி, பயிற்சி குறித்த விபரங்களைக் கேட்டறிந்தார்.

பின்னர் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திறன் வளர்ப்புப் பயிற்சிகளை RESTI-யுடன் இணைந்து மேற்கொள்ள நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகளை ஆராய்ந்தார்.

இந்நிகழ்வில் கனரா வங்கி RESTI தேசிய இயக்குனர், மாநில இயக்குநர், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி. எஸ். பாரிஜாதம், திட்ட அலுவலர், கோயம்புத்தூர், மாநில இயக்க மேலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை மின்னணு வணிகம் வாயிலாக சந்தைப்படுத்துதல் குறித்த பயிற்சி

சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பல்வேறு பொருட்கள் கண்காட்சிகள் மற்றும் பூமாலை வணிக வளாகங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படுகின்றன. அனைத்துத் தரப்பினரையும் இப்பொருட்கள் சென்றடையச் செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பாக பிளிப் கார்டு (Flipkart) நிறுவனத்துடன் இணைந்து, சென்னை, திருவள்ளூர், வேலூர் ஆகிய மாவட்டப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பல்வேறு பொருட்களை மின்னணு வணிகம் (E-Commerce) வாயிலாக சந்தைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி 11.02.2020 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி. பெ. விஜயலட்சுமி அவர்கள் துவக்கி வைத்தார். 50 உறுப்பினர்கள் கலந்து கொண்ட இப்பயிற்சியில், Flipkart நிறுவனத்தின் மேலாளர் கலந்து கொண்டு, சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் தரம், பேக்கிங் மற்றும் பிராண்டிங் ஆகியவை குறித்து பயிற்சியளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் புதுச்சேரி நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரம் இயக்கம் ஆகியவற்றின் மாநில மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

மறுகுடியமர்த்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த சமூக வளப் பயிற்றுநர்களுக்கு வங்கித் தொடர்பாளர் பயிற்சி

மறுகுடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புகளான பெரும்பாக்கம், AIR நகர், கூடப்பாக்கம் மற்றும் நாவலூர் ஆகிய பகுதிகளில் சமூக வல்லுனர்களாகப் பணிபுரியும் நபர்களுக்கு வங்கித் தொடர்பாளர் பயிற்சி திருவள்ளூர் மாவட்ட இந்தியன் வங்கி சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் (RSETI) மூலம் சென்னை, கோபாலபுரத்தில் செயல்பட்டு வரும் நகர வாழ்வாதார மையத்தில் (CLC) 10 நாட்கள் நடைபெற்றது. மறுகுடியமர்த்தப்பட்ட பகுதிகள் ஒவ்வொன்றில் இருந்தும் 6 சமூக வல்லுனர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியின் துவக்க விழா மற்றும் நிறைவு விழாவில் கலந்து கொண்ட இந்தியன் வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. மனோரஞ்சன் தாகூர் அவர்கள், பயிற்சியின் முக்கியத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு குறித்து எடுத்துரைத்தார். மேலும் அவர் பேசும்போது, இப்பயிற்சிக்குப் பின்னர் இந்தியன் இன்ஸ்ட்டியூட் ஆப் பேங்கிங் அண்டு பைனான்ஸ் (Indian Institute of Banking and Finance) மூலம் நடத்தப்படும் ஆன்லைன் தேர்வுக்குத் பயிற்சி அளிக்கப்படும் என்றும், அத்தேர்வில் வெற்றி பெறும் அனைவருக்கும் இந்தியன் வங்கி மற்றும் பிற வங்கிகளில் தேவைக்கேற்ப வங்கித் தொடர்பாளர் பணி வாய்ப்பு வழங்கப்படும் என்றும், இதுபோன்ற பயிற்சி வழங்குவது தமிழக அளவில் இதுவே முதல்முறை என்றும், இப்பயிற்சியின் வெற்றியைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நகர்ப்புறங்களில் இதுபோன்ற பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர்திருமதி. எஸ். பாரிஜாதம், சென்னை மாவட்ட வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. தியாகராஜன், திருவள்ளூர் RSETI நிறுவனத்தின் மேலாளர் திரு. வாசுதேவன், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில வல்லுநர் திரு. மூர்த்தி, வாழ்வாதார இயக்கத்தின் உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி. அமுதா, திரு. அருள்ஜோதி, திருமதி. வசந்தி, திருமதி. சிந்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சமுதாய வள பயிற்றுநர்களுக்கு TOT பயிற்சி

தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் நகர்ப்புற பகுதிகளில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்குழுக்களை வழிநடத்துவதற்காக அப்பகுதிகளில் உள்ள அனுபவம் வாய்ந்த சுய உதவிக் குழு உறுப்பினர்களை கண்டறிந்து, பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலம் அவர்களின் திறன்கள் பரிசோதிக்கப்பட்டு, பின்னர் அவர்கள் ``சமுதாய வள பயிற்றுனர் (CRP)ஆக நியமிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட சமுதாய வளப் பயிற்றுனர்களுக்கு திட்டத்தின் குறிக்கோள்கள் அமல்படுத்தும் முறை, சமுதாய வள பயிற்றுர்களுக்கான தகுதிகள், கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த பயிற்சி, கோயமுத்தூரில் உள்ள நகரியல் பயிற்சி நிறுவன பயிற்சி மையத்தில் 04.02.2020 முதல் 07.02.2020 வரை நான்கு நாட்கள் வழங்கப்பட்டது. மேலும் இரண்டு கட்டமாக நடைபெற்ற இப்பயிற்சியில் 96 சமுதாய வளப் பயிற்றுநர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

பயிற்சிக்குப் பின்னர், சமுதாய வள பயிற்றுர்கள் தங்களது மாவட்டத்திற்கு சென்று சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துதல், வங்கிக் கடன் இணைப்பு மற்றும் வாழ்வாதார செயல்பாடுகளில் நகர்ப்புற ஏழை மக்களுக்கு வழிகாட்டியாக செயல்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த, நகர்ப்புற ஏழை மக்களுக்கு வழிகாட்டியாக செயல்பட்டு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி. எஸ். பாரிஜாதம் அவர்கள் பயிற்சியில் கலந்த கொண்ட சமுதாய வளப் பயிற்றுனர்களுடன் கலந்தரையாடல் செய்து, அனைத்து சமுதாய வள பயிற்றுனர்களும் சிறப்பாக செயல்பட வாழ்த்தினார்.

சுரபி மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதை

சேலம் மாநகராட்சி, கொண்டலாம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண்: 48, குகை பகுதியில் உள்ள தொல்காப்பியர் தெருவில் வசித்து வரும் பெண்கள் ஒன்றிணைந்து நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சுரபி மகளிர் சுய உதவிக் குழுவினை துவக்கி, இப்பகுதியில் செயல்படும் இந்தியன் வங்கியில் சேமிப்புக் கணக்கு மூலம் சேமிக்கத் துவங்கினர். இக்குழுவினைச் சேர்ந்த 5 நபர்களுக்கு இந்தியன் வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையம் (RSETI) மூலமாக காகிதப் பைகள் (Paper Bags) மற்றும் அலுவலகக் கோப்புகள் (Files) தயாரிக்கும் பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டது.

இதன் பின்பு செவ்வாய்ப்பேட்டை கிளை ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் மூலமாக கடன் தொகையாக ரூ. 1,20,000/- பெற்று தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களை கொள்முதல் செய்து பேப்பர் பைகள் மற்றும் பைல்கள் தயாரித்து வந்தனர். பெற்றக் கடனையும் தவணை தவறாமல் கட்டி முடித்ததால், இரண்டாவது முறையாக ரூ. 3,60,000/- பெற்று தொழிலை விரிவுபடுத்தியுள்ளனர். இக்குழுவினர் தயாரிக்கும் பேப்பர் பைகள் மற்றும் பைல்கள் தரமாகவும், சுற்றுச்சூழலை மாசுபடுத்தாமலும் இருப்பதால், அரசு அலுவலகங்கள், வங்கிகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பெருமளவில் வாங்குகின்றன.

இந்தத் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் கணிசமான அளவில் வருவாய் ஈட்டி வருகின்றனர். இந்த பொன்னான வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் கடன் உதவி வழங்கிய ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் வங்கி ஆகியவற்றிற்கு சுரபி மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர்.

பொருளாதார வளர்ச்சி தந்த இயக்கம்

என் பெயர் சுகிர்தா. நான் விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சியில் உள்ள சேனிக்குடி பகுதியில் வசித்து வருகிறேன். எனது குடும்பம் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளது. நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் டாக்டர் அப்துல்கலாம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினராக இருந்து வரும் நான் சிறிய அளவில் பித்தளை சாமான்கள் விற்பனை செய்யும் கடை வைத்துள்ளேன். இக்கடையின் மூலம் போதிய வருவாய் இல்லாததால் எனது தொழிலை விரிவுபடுத்த வேண்டும் என்ற விருப்பத்தில், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி, கடன் வேண்டி விருதுநகர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் (VRD-CO) விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு ரூ. 25,000/- கடனாக வழங்கப்பட்டது. அந்த தொகையை மூலதனமாக கொண்டு, வீட்டு உபயோக பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், பித்தளை சாமான்கள் ஆகியவற்றை வாங்கி தொழிலை விரிவுபடுத்தினேன். மாதம் தவறாமல் கடனை செலுத்தியதால் மீண்டும் வங்கி கடனாக ரூ. 2,00,000/- பெற்று தற்போது எனது கடையை மேலும் விரிவுபடுத்தியுள்ளேன். இத்தொழிலில் மாதந்தோறும் வங்கி கடன் தவணை செலுத்தியது போக கணிசமான வருவாய் கிடைக்கிறது. எனது குடும்பத்திற்கும், எனது இரு பெண் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு இந்தத் தொழிலானது மிகவும் பயனுள்ளதாக உள்ளது. எனது வளர்ச்சிக்கு உதவிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களது நன்றியை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனநிறைவு தரும் பணியை வழங்கிய மகளிர் திட்டத்திற்கு நன்றி

என் பெயர் ஜெ, சுதா, நான் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகரத்தில் மகளிர் திட்டத்தின் கீழ் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய வளப் பயிற்றுநராக 2017 ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறேன். இதுவரை 80 சுய உதவிக் குழுக்களை அமைத்து, அனைத்து குழுக்களுக்கும் சுழல் நிதி பெற்றுத் தந்துள்ளதுடன், NULM குழுக்களுக்கு முதல், இரண்டு மற்றும் மூன்றாவது வங்கி கடன் இணைப்புகள் பெற்றுத் தந்துள்ளேன்.

குறிப்பாக திண்டிவனம் நகராட்சி பகுதியில் அதிகபட்ச வங்கி கடன் இணைப்பாக ரூ. 9,75,000/- பெற்றுத் தந்துள்ளேன். மகளிர் குழுக்களுக்கு வங்கி வட்டி மானியம் பெற தேவையான ஆவணங்கள் பெற்று சமுதாய அமைப்பாளர் மூலம் மகளிர் திட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் பணியும் மேற்கொண்டு வருகிறேன். நகராட்சியின் மூலமாக நடந்தப்பட்ட தெருவோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணியை மேற்கொண்டு, என் பகுதியில் 2 பயனாளிகளுக்கு வங்கி கடன் இணைப்பு பெற்று தந்துள்ளேன்.

நான் எனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதியில் உள்ள உறுப்பினர்களை தேர்வு செய்து மகளிர் திட்டம் மூலமாக திறன் மேம்பாட்டு பயிற்சியான தையல் மற்றும் அழகுகலை பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படுத்தித் தந்ததுடன், மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களில் பயனாளிகளை கலந்து கொள்ள வழிவகையும் செய்து வருகிறேன். குழு சம்பந்தப்பட்ட செயல்பாடுகள் மட்டுமல்லாது பொது செயல்பாடுகளான வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அனைத்து வீடுகளிலும் தனிநபர் கழிவறை கட்டுதல், டெங்கு விழிப்புணர்வு, வீட்டு தோட்டம் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நெகிழிப் பொருட்கள் ஒழித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறேன். எனக்கு மனநிறைவு தரும் பணியை வழங்கிய மகளிர் திட்டத்திற்கும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ. சுதா (CRP) திண்டிவனம் நகராட்சி

வளமான வாழ்விற்கு வழிகாட்டிய வாழ்வாதார இயக்கம்

எனது பெயர் பிரேமா, விருத்தாசலம் நகராட்சி பகுதியில் 15வது வார்டில் உள்ள செல்வராஜ் நகரில் வசித்து வரும் நான் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகி 17 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு 3 குழந்தைகள் உள்ளனர். ஆரம்ப காலத்தில் நான் என்னுடைய வீட்டு பணியை மட்டும் செய்து கொண்டு வெளி உலகத்தை பற்றி அறிந்து கொள்ளாமல் இருந்தேன். பின்னர் நான் வசிக்கும் பகுதியில் 15 மகளிரைக் கொண்டு “ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவி குழு”வினைத் துவங்கி அதன் ஊக்குனராக செயல்பட்டு வந்தேன். சுய உதவி குழுவில் ஊக்குனராக சிறப்பாக பணியாற்றியதால் கடலூர் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் சமுதாய வளப் பயிற்றுனராகத் தேர்வு செய்யப்பட்டு சமுதாய வளப் பயிற்றுநருக்கான பயிற்சி பெற்றேன்.

விருத்தாசலம் நகராட்சி பகுதியில் 2016-2017ம் ஆண்டில் இருந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய வளப் பயிற்றுனராகப் பணி செய்து வருகிறேன். எனது பகுதியில் 18 புதிய குழுக்கள் அமைத்து, அவைகளுக்கு வங்கி கணக்கு துவங்கி, அதன் உறுப்பினர்களுக்கு நிதி மேலாண்மை பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, புத்தகப் பராமரிப்புப் பயிற்சி போன்றவற்றை அளித்து நாளது தேதி வரை அந்த சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட கண்காணித்து வருகிறேன். மேலும், இந்த குழுக்களுக்கு வங்கி நிதி இணைப்பாக ரூ. 31.64 இலட்சம் நேரடி கடன் பெற்று தந்துள்ளேன். குழுக்கள் வங்கி கடனை தவணை தவறாமல் திருப்பி செலுத்துவதையும் கண்காணித்து வருகிறேன்.

இப்பணிகளை நான் சிறப்பாக செய்வதால் வங்கி மேலாளார்களிடம் நன்மதிப்பை பெற்றுள்ளேன். மேலும், பல்வேறு அரசு துறை அலுவலர்கள், சமூக ஆர்வலர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைப்பதால், இதன் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பல்வேறு அரசு நல திட்டங்களை பெற்று தருவதற்கான வாய்ப்புகளும் கிடைக்கின்றன. மேலும் பிற துறை திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு எனது கண்காணிப்பில் உள்ள குழுக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பயன் பெற செய்கிறேன். TNULM திட்டத்தின் கீழ் ஊக்குனர் மற்றும் பிரதிநிதி, சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல், புதிய சுய உதவிக்குழு அமைத்தல், கணக்கெடுப்பு செய்தல் போன்ற பணிகளை செய்வதன் மூலம் மாதந்தோறும் கணிசமான அளவு வருமானம் ஈட்டுகிறேன். இதன் மூலம் என்னுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்கிறேன்.

வளமான வாழ்க்கைக்கு வழி வகை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரேமா (CRP) விருத்தாசலம் நகராட்சி

முற்றக் கச்சேரி 2.0

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளி யிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு ஊக்குநர் மதியின் வீடு

கதை மாந்தர்கள் : ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் பாலா, கீதா மற்றும் மங்கை

சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான பாலா, கீதா மற்றும் மங்கை ஆகியோர் சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மதி வீட்டிற்கு வருகின்றனர்.

பாலா, கீதா மற்றும் மங்கை : மதி அக்கா... மதி அக்கா...

மதி : வாங்க... வாங்க...உட்காருங்க...

பாலா : என்னக்கா, எதுக்கு எங்களை இப்படி அவசரம் அவசரமாக, கூட்டி வரச் சொன்னீங்க?

மதி : அட, பாலா ஒன்னுமில்லே, நம்ம குழுவோட வரவுசெலவு கணக்கு விபரங்களைப் பார்க்கத்தான் உங்களை வரச் சொன்னேன்.

கீதா : குழுவோட வரவுசெலவு கணக்குக்கு இப்ப என்ன அவசரம்? அந்த வரவுசெலவு கணக்கை நீங்க பார்த்தா போதாதா? அதை நாங்க ஏன் பார்க்கணும்?

மதி : ஒவ்வொரு வருசமும், மார்ச் மாதம் முடிய உள்ள தேதி வரை வரவுசெலவு கணக்கைப் பார்த்து, சரி செய்யணும். குழுவோட அனைத்து உறுப்பினர்களுக்கும் வரவுசெலவு கணக்கு விபரங்களை தெரிய வைக்கிறதுக்காகத்தான் உங்களை வரச்சொன்னேன்.

மங்கை : வருசா வருசம், வரவுசெலவு விபரங்களை பார்ப்பதால குழுவுக்கு என்ன நன்மை அக்கா?

மதி : என்ன பாலா இப்படி கேக்குறீங்க? ஒரு குழுவோட செயல்பாட்டை, அந்தக் குழுவோட வரவுசெலவு கணக்கப் பார்த்தாலே எளிதாகத் தெரிஞ்சுக்கலாம்.

பாலா : அப்படியா?

மதி : ஆமாம்பா... அதுமட்டுமில்ல, ஒவ்வொரு குழுவுக்கும் வரவு வரும் வழிகள், இதுவரை குழு சார்பா எவ்வளவு செலவு செஞ்சிருக்காங்க, உறுப்பினர் சந்தா எவ்வளவு, உள் கடன் எவ்வளவு கொடுத்திருக்காங்க, கடன் திருப்பம் எவ்வளவு, உள் கடன் வட்டி வரவு எவ்வளவு, வங்கி வட்டி, வெளிக்கடன் திருப்பம், வட்டி செலுத்தியது, வங்கி இருப்பு எவ்வளவு, சொத்துக்கள் எவ்வளவு, பொறுப்புகள் எவ்வளவு அப்படிங்கிற விபரம் முழுவதும் வரவு செலவு கணக்குலதான் இருக்கும்.

கீதா : அட... வரவு செலவு கணக்கு இவ்வளவு முக்கியமானதா? குழுவுல மட்டுந்தான் வரவு செலவு கணக்க பார்ப்பாங்களா?

மதி : குழுவுல மட்டுமில்லை, பகுதி அளவிலான கூட்டமைப்புகள், நகர்ப்புற வாழ்வாதார மையம் மற்றும் நகர அளவிலான கூட்டமைப்புகள் போன்ற நமது சமுதாயம் சார்ந்த அமைப்புகள், சிறிய கடை முதல் பெரிய நிறுவனங்கள் அரசுத் துறைகள் என எல்லோரும் வரவு செலவு கணக்கப் பதிவு செய்வாங்க.

மங்கை : அட... அப்படியா?

மதி : ஆமா கீதா. நாம செய்யற செலவுகளை முறையாக எழுதி வச்சிருந்தாதான் தேவையற்ற செலவுகள் என்னன்னு தெரிஞ்சுட்டு, எளிதாக அதை தவிர்க்கலாம். அதுமட்டுமில்லாம குழுவுக்கு வர வேண்டிய பணம் எவ்வளவு என்பதையும் எளிதாகத் தெரிஞ்சிக்க முடியும்.

பாலா : என்னக்கா...வரவு செலவுல இவ்வளவு இருக்கா?

மதி : ஆமாம் பாலா... அதுமட்டுமில்ல குழுவுல எவ்வளவு பணம் இருக்குதுங்கற விபரத்தை தெரிஞ்சுகிட்டு, நுண் நிதிக்கான திட்டம் தயாரித்து,பணம் தேவைப்படும் உறுப்பினர்களுக்கு உள் கடன் கொடுக்கலாம். இருக்கிற பணத்தைத் கொண்டு குழுவின் சார்பா ஏதாவது தொழிலும் செய்யலாம். அல்லது எதிர்வரும் வருடங்களில் வங்கிக் கடன் வாங்கலாம். இதுக்கெல்லாம் வரவு செலவு விபரம் சரியா இருக்கணும்.

மங்கை : நீங்க சொல்லறது சரிதான் அக்கா... வரவு செலவு விபரத்தை எப்படி பதிவு செய்யணும்?

மதி : நாம செலவு செய்யும் போது அதற்கான பில்களையும் / ரசீதுகளையும் கண்டிப்பாக வாங்கணும். அதேபோல வரவுக்கு முறையாக ரசீது கொடுக்கணும். ஆதாரம் இல்லாம பணம் வாங்கவோ, கொடுக்கவோ கூடாது. தினசரி நடந்த வரவு செலவுகளை, அதற்கான ரொக்கப் புத்தகம் மற்றும் பொதுப்பேரேடு புத்தகங்கள்ல பதிவு செய்யணும்.

கீதா : அப்படியா... வரவு செலவு புத்தகத்தை யார் பராமரிப்பாங்க?

மதி : குழுவோட வரவு செலவுகளை நமது குழுவில் 10வது வரை படித்துள்ள நமது லட்சுமி அக்கா குழுவின் கணக்காளரா இருந்து பராமரிப்பாங்க.

பாலா : அதுசரி... வரவு செலவு விபரங்களை யார் சரிபார்ப்பாங்க?

மதி : குழுவோட வரவு செலவு விபரங்களை குழுக் கூட்டத்துல விவாதிச்சு, குறைகள் இருந்தா சரி செய்து, CRP மூலம் உள் தணிக்கை செய்த பின்பு முறையான ``தணிக்கையாளர்'' மூலம் மட்டுமே வெளித்தணிக்கை செய்யணும்.

கீதா : குழுவோட வரவு செலவு கணக்கு அவ்வளவு முக்கியமா?

மதி : ஆமாம். ஒரு குழுவோட வரவு செலவு விபரத்தை நல்லபடியா பராமரிச்சு வந்தா, அந்த குழுவுக்கு பல பயன்கள் கிடைக்கும்.

மங்கை : என்ன பயன்கள் கிடைக்கும்?

மதி : குறிப்பிடும்படியா சொன்னா, வங்கிக் கடன் இணைப்பு பெற முடியும், உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் கிடைக்கும். தொழில் கடன் கிடைக்கும். உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் போது குழுவில் இருந்து கடன் உதவி கிடைக்கும். பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலம் பெருங்கடன் கூட வாங்க முடியும். அதோடு மட்டுமில்லாமல், வங்கிக் கடன் பெற்று, நமது வாழ்வாதாரத்தை நாமே சிறப்புற அமைக்க முடியும்.

கீதா : அப்படியா... ரொம்ப நல்லாயிருக்கே...

மதி : ஆமாம் கீதா... செய்யற செலவுக்கும், வாங்கற பணத்துக்கும் முறையான கணக்கு வைச்சிருப்பது எப்பவுமே நல்லது. வரவு செலவு கணக்கை பதிவு செய்வது என்பது நமது சுய உதவிக் குழுவிற்கு மட்டுமல்ல, சொந்த வாழ்க்கைக்கும் நல்லது.

மங்கை : நீங்க சொன்னா சரிதான் மதி அக்கா. நம்ம குழுவோட வரவு செலவ நீங்க பார்த்தீங்களா? சரியா இருக்கா?

மதி : நான் பார்த்துட்டேன். நீங்களும் ஒருமுறை பார்த்திடுங்க. அடுத்த வாரம் நம்ம குழுக் கூட்டத்துல வைச்சு மறுபடியும் ஒருமுறை சரிபார்த்துடலாம்.

பாலா : சரிக்கா... கணக்கு புத்தகத்தைக் கொடுங்க, நாங்க பார்க்கிறோம்.

பாலா, கீதா மற்றும் மங்கை குழுவின் வரவு செலவு புத்தகங்களை சிறிது நேரம் பார்வையிட்டு விட்டு பிறகு மதியிடம் திருப்பித் தருகின்றனர்.

மதி : கணக்கெல்லாம் சரியா இருக்கா?

பாலா, கீதா மற்றும் மங்கை: ரொம்ப சரியா இருக்கு அக்கா. சரி நாங்க போயிட்டு வரட்டுமா?

மதி : சரி போயிட்டு வாங்க... குழுக் கூட்டத்துல சந்திப்போம்.

பாலா, கீதா மற்றும் மங்கை ஆகியோர் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

அழகாகத் திகழ்வதற்கான சில எளிய அழகுக் குறிப்புகள்!

அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பல அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்தி வருகின்றோம். அதற்காக வேதிப்பொருள் குறைவாக உள்ள அல்லது வேதிப்பொருட்களே இல்லாத அழகு சாதனப் பொருட்களையே பயன்படுத்த விரும்புகிறோம். வேதிப்பொருட்கள் கலந்த அழகு சாதனப் பொருட்களின் விலை அதிகமாக இருப்பது மட்டுமல்ல. தொடர்ந்து பயன்படுத்தி வந்தால், அவை சருமத்திற்கு, கூந்தலுக்கு மற்றும் உடலுக்கு கேடுகள் விளைவிப்பவை என்றும் அனைவரும் நன்றாக அறிவோம்.

எனவே, வீட்டில் அன்றாடம் பயன்படுத்தி வரும் இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தி, உடலை அழகாகப் பராமரிப்பதற்கான, சில அழகுக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. எனவே உடலை இயற்கை வழியில் மேலும் மெருகேற்றிக் கொள்ள ஒரு வாய்ப்பு என்று எடுத்துக் கொண்டு பின்பற்றிப் பாருங்களேன்!!!

சிட்ரஸ் ஃபேஸ் மாஸ்க்

சுருக்கமில்லாத சருமத்துடன் எப்போதும் இளமையாகத் தோன்றுவதையே அனைவரும் விரும்புவோம். எலுமிச்சைச் சாறு, தேன், சாத்துக்குடிச் சாறு மற்றும் தயிர் ஆகியவற்றை நன்றாகக் கலந்து கொண்டு, சுருக்கங்கள் உள்ள இடங்களில் தடவி ஊற வைத்து கழுவ வேண்டும். தயிருக்கு இயற்கையிலேயே, ப்ளீச் செய்யும் குணம் உண்டு என்பதால், சருமத்தில் உள்ள கரும்புள்ளிகளும் இக்கலவையைப் பயன்படுத்தினால் காணாமல் போகும்.

முட்டையின் வெள்ளைக் கரு

முகத்திலுள்ள சுருக்கங்களை நீக்கி சருமத்தை மென்மையாக தோற்றமளிப்பதற்கு மற்றுமொரு அழகுக் கலவையும் உண்டு. முட்டையின் வெள்ளைக்கருவை ஒரு கிண்ணத்தில் ஊற்றி நன்றாக ஒரு கரண்டியினால் கலக்க வேண்டும். அதன்பின் அந்த கலவையை கண்கள், தாடைகள், நெற்றி, கன்னம் போன்ற பகுதிகளில் பூச வேண்டும். பின் அவை நன்றாக காய்ந்த பிறகு கழுவித் துடைத்துவிட வேண்டும். இவ்வாறு தவறாது செய்து வந்தால், மெல்லிய கோடுகள், சுருக்கங்கள் ஆகியவை மெல்ல மறைவதைக் காண முடியும். சுருக்கங்கள் மறைவதனால், இளமையான தோற்றமும் கிடைக்கும்.

வெள்ளரிக்காய்

வெள்ளரிக்காய்களை வட்டவடிவிலான துண்டுகளாக வெட்டி, அவற்றைக் கண்கள் மீது சிறிது நேரம் வைத்து வந்தால், அது கண்களைச் சுற்றி இருக்கும் கருவளையங்களைப் நீங்கும். மேலும் இத்தகைய வெள்ளரிக்காயைக் கொண்டு சிறந்த ஃபேஷியல் மாஸ்க் செய்யலாம். அதற்கு சிறிய வெள்ளரிக்காயை, ஓட்ஸ் உடன் மிக்ஸியில் போட்டு அரைத்து, தயிருடன் கலந்து முகத்தில் தடவி ஊற வைத்து கழுவ வேண்டும்.

பழங்கள் மற்றும் காய்கறிகள்

செர்ரி, தக்காளி, உருளைக்கிழங்கு மற்றும் கேரட் ஆகியவற்றைத் துண்டுகளாக வெட்டி, மிக்ஸியில் சிறிது பால் சேர்த்து நன்றாக பசை போல அரைக்கவும். இக்கலவையை முகத்தில் தடவி நன்றாகக் காயும் வரை காத்திருக்க வேண்டும். அதன்பின் குளிர்ந்த நீரில் முகத்தை கழுவவும். இதனால் பக்க விளைவுகள் ஏதுமின்றி முகம் எப்போதும் பளபளப்பாகவும், புத்துணர்வுடனும் இருக்கும்.

திராட்சை

திராட்சைப் பழங்கள் ஒரு அற்புதமான க்ளின்சர்களாகச் செயல்படும். எனவே அவற்றை எடுத்து சாதாரணமாக முகத்தில் அழுத்தித் தேய்த்தாலே போதும். முகம் புதுப்பொலிவுடன் பிரகாசிக்கும்.

எலுமிச்சை, முட்டை ஃபேஸ் மாஸ்க்

முகத்தில் பருக்களும், சிறு கட்டிகளும் நிறைந்து அவஸ்தைப்படுவோருக்கு பயன் தரும் சிறப்பான மாஸ்க். எலுமிச்சை சாறுடன் முட்டையின் வெள்ளைக்கருவை சேர்த்து நன்கு அடித்துக் கொள்ளவும். இக்கலவையை முகத்தில் பிரச்சனை உள்ள பகுதிகளில் தடவி ஒரு இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் வெதுவெதுப்பான நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இதை தொடர்ந்து செய்வதால், முகத்தில் உள்ள பருக்களும் சிறு கட்டிகளும் நீங்கும்.

மஞ்சள் ஃபேஸ் மாஸ்க்

பளிச்சிடும் நிறத்தில் சருமம் பிரகாசிக்க மஞ்சள் ஃபேஸ் மாஸ்க் உதவும். அதற்கு சிறிது மஞ்சள் தூள், பாதாம் எண்ணெய், கடலை மாவு, பால், சந்தனப் பவுடர் ஆகியவற்றைக் கலந்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடங்களுக்கு பிறகு தண்ணீரில் கழுவ வேண்டும். இக்கலவையை தினமும் முகத்தில் பூசிவந்தால், முகம் மாசு மருவின்றிப் பொலிவுடன் திகழும்.

ஈஸ்ட்டுடன் கூடிய தயிர் மாஸ்க்

எண்ணெய்ப் பசையுள்ள சருமத்தின் விளைவாக முகத்தில் பரு மற்றும் தோல் தடித்தல் உண்டாகும். மேலும் சருமத்திலுள்ள நுண்ணிய துவாரங்கள் வழியாக எண்ணெய் சுரக்கும். ஈஸ்ட்டுடன் சிறிது தயிரை கலந்து முகத்தில் தடவினால், எண்ணெய் வழிவதைக் குறைத்து பருக்கள் தோன்றுவதையும் குறைக்கும்.

தேயிலைத்தூள் பை

கொதிக்கும் நீரில் தேயிலைத்தூள் பைகளை(Tea Bags) 10 நிமிடங்கள் ஊற வைத்து, பின் நன்றாகக் குளிர வைத்து, நீரில் அலசிய கூந்தலில் இந்த நீரைத் தடவ வேண்டும். இதனால் தலைமுடிக்கு கூடுதல் பளபளப்பைத் தரும் திறன் தேயிலைக்கு உண்டு. மேலும் இந்த முறை தலைமுடியிலுள்ள சிக்குகளை நீக்கி எளிதாகப் பராமரிக்கவும், தலைமுடியை மென்மையாக்கவும் இது உதவுகிறது. கண்களில் ஏற்படும் வீக்கத்தினைப் போக்குவதற்கு, ஈரமான தேயிலைத்தூள் பை (tea bags), வெள்ளரிக்காய் மற்றும் உருளைக்கிழங்கு துண்டுகள் ஆகியவற்றை கண்கள் மீது சுமார் 10 நிமிடங்கள் வைத்துக் கொண்டால், உடனடியான பலனை உணரலாம்.

அழகான உதடுகளை பெற

உதடுகள் வறண்டு போகும் தன்மை உடையவையாக இருந்தால், பாதாம் எண்ணெய் தடவிவரவும். குளிர்காலங்களில் உதடுகள் வெடிக்கின்றனவா? ஆமெனில் சிறிது தேனைத் தடவலாம். இயற்கையான அழகுடன் உதடுகளைப் பெற வேண்டுமென விரும்பினால், உணவில் நிறைய பழங்களையும், காய்கறிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள்

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாட்டினை மதிப்பிடவும் மற்றும் திட்டத்தை மேம்படுத்தவும் 10 நபர்கள் அடங்கிய உலக வங்கி குழுவினர் 20.01.2020 முதல் 25.01.2020 ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது உலக வங்கி குழுவினர் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு ஒருநாள் களப்பயணம் மேற்கொண்டு திட்டச் செயல்பாட்டுகளை நேரில் பார்வையிட்டதுடன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களால் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்களுக்கான காணொளி கூட்டத்தில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் குறித்து விளக்கியும் கலந்துரையாடினர். இந்தக் களப் பயணத்தின் போது திருவள்ளூர் மாவட்டத்தில் மீன் உற்பத்தியாளர் குழுவினரிடமும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மகளிர் காய்கறி உற்பத்தியாளர் குழுவினரிடமும் கலந்துரையாடி அவர்களின் முன்னேற்றத்தைக் கேட்டறிந்தனர்.

கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வு

உலக வங்கிக் குழுவினர் மற்றும் திட்டப் பணியாளர்கள் இடையே கலந்தாய்வு கூட்டம் 23.01.2020 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது பல்வேறு மாவட்டங்களின் பகுப்பாய்வு அறிக்கையை மாவட்டங்களின் திட்ட செயலாக்க அலுவலர்கள் பகிர்ந்து கொண்டனர். மேலும் திட்டத்தில் தகவல் பரிமாற்றத்தினை மேம்படுத்திடவும், திட்டக் கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதல் கூறுகளை விரைவுபடுத்தவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்போது திட்ட முன்னேற்றத்திற்காக உலக வங்கி குழுவினர் தெரிவித்த கருத்துக்களைக் கேட்டறிந்தார். கூட்டத்தில், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயலாக்க அலுவலர் திரு. ஜா. சம்பத் அவர்கள், உலக வங்கியின் சார்பாக திரு. சமீக் சுந்தர்தாஸ், திருமதி. வரலட்சுமி வெமூரு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உலக மகளிர் தின விழா...!

இந்த நாள்...

அடக்கப்பட்ட பெண் சக்தி வீறுகொண்டு
எழுச்சி காணும் நாள்...!
ஆணுக்குப் பெண் சமம் அல்ல...
அதற்கும் மேல் என உணர்த்தும் நாள்!
மறைக்கப்பட்ட அறிவும், மறக்கப்பட்ட துயரும்
நினைக்கப்படும் நாள் – தம்
அடிமைத்தளை உடைந்ததை
ஆளுமைத் திறன் வளர்ந்ததை
பெண்கள் எடுத்துரைக்கும் நாள்...!

ஒரு பிரேத அறை பிரசவ விடுதியாய்
உயர்த்தெழுந்ததை தெரிவிக்கும் நாள்;
பெரும் பாறையின் தடை தகர்ந்து
புதிய பாதை ஏற்பட்டதை உணர்த்தும் நாள்;
ஒரு கட்டுமரம் பெரும் கப்பலாய்
வளர்ந்திருப்பதைக் கொண்டாடும் நாள்;
ஒரு சிறைப்பறவை விடுதலை வானில்
சிறகடித்துப் பறப்பதை படம் பிடிக்கும் நாள்...!

பூமிக்குள் புதையுண்ட தங்கக் கட்டிகள்
ஆயிரம் ஆண்டுக்குப் பிறகும்
தங்கக் கட்டிகளே!
அடிமையாய் தாதியாய் ஆக்கப்பட்டாலும்
அறிவும் ஆற்றலும் அவர்களின்
பெரும் சொத்துக்களே!
அருமை தெரியாத வரை தங்கமும்
வைரமும் வீண்தாம்! – அதன்
பெருமை உணர்ந்த இன்று அவையே
மகுடங்களாம்! அணிகலன்களாம்!!

உண்மை அறியாத உலகில்
பெண்மை ஊமையானது–இன்று
திறமை அறிந்த போது அதுவே முதன்மையானது!
பெண்ணின் பெருமை உலகம் உணர
எத்தனையெத்தனை திட்டங்கள்? – அவள்
கண்ணில் வடியும் நீரைத் துடைக்க
எத்தனையெத்தனை சட்டங்கள்?
நிலவை மறைத்த கிரகணம் விலக
எத்தனையெத்தனை யாகங்கள்? – இன்று
பூரண நிலவு பூமியை நிறைக்க
மனதில் ஆனந்த ராகங்கள்...!

ஜா. சம்பத்,
முதன்மை செயலாக்க அலுவலர்/
கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத்
திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித் துறை

அரசுத் துறை அலுவலர்களுக்கான திட்டஅறிமுகக் கூட்டம் மற்றும் மாவட்ட பகுப்பாய்வு புத்தகம் வெளியிடல்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட அளவிலான திட்டத்தின் முக்கிய பங்குதாரர்களாகிய அரசுத் துறை அலுவலர்களுக்கான திட்ட அறிமுகம் மற்றும் மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை சமர்பித்தல் மற்றும் ஒப்புதலுக்கான கூட்டம் 23.01.2020 அன்று திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. டி. ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஏ. கே. கமல் கிஷோர் அவர்கள் தனது அறிமுக உரையில் "அனைத்துத் துறை அலுவலர்களும் ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, ஊரகப் பகுதிகளில் தொழில் முனைவோர்களை உருவாக்க வேண்டும்" என்று கூறினார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் உரையாற்றும் போது, "இத்திட்டத்தின் மூலமாக முறையான தொழில் முதலீடு திட்டங்களை வகுத்தும், இளைஞர் களிடையேயான தொழில் திறனில் உள்ள இடைவெளியை அடையாளம் கண்டறிந்து, அவர்களது திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பு மற்றும்

தொழில் முனைவு போன்ற மாற்றத்தினை இப்புத்தாக்கத் திட்டம் வாயிலாக செயல்படுத்த உள்ளதாகக் கூறியதுடன், சேவைத் துறையில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் மக்களுக்கான வாழ்க்கை நிலையை மேம்படுத்த முடியும் என்றும், புதுமையான முயற்சியில் அணுகுமுறை இருக்க வேண்டும்" என்றும் கூறினார். தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட மாவட்ட செயல் அலுவலர் திரு. வி. சுந்தரபாண்டியன் அவர்கள் திட்டத்தைப் பற்றியும், மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை பற்றியும் விளக்கிக் கூறினார். இக்கூட்டத்தில் மாவட்ட அரசுத் துறைகளின் முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வெளியிடப்பட்ட மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு. கமல் கிஷோர் மற்றும் கால்நடைத் துறை இணை இயக்குநர் திரு. தனபால் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மானாமதுரையில் மண்ணைப் பொன்னாக்கும் மண்பாண்ட புரட்சி!

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்தில் உள்ள சூரக்குளம் பில்லருத்தான் ஊராட்சியில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட களப் பணிகளின் போது மண்ணை பொன்னாக்கி மண்பாண்ட புரட்சி செய்யும் மனிதரைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

அவரது பெயர் மூர்த்தி (வயது 40), த/பெ. அருணாச்சலம். இவர் ஐ.டி.ஐ. படித்து முடித்து விட்டு சரியான வேலை கிடைக்காததால் துபாயில் ஒப்பந்த கட்டிடத் தொழிலாளியாக இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தார். அங்கும் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்காத காரணத்தினால் தாயகம் திரும்பி, வாழ்வதற்கு என்ன வழி என்று தவித்தபோது, தனது தந்தையின் தொழிலான பாரம்பரிய மட்பாண்ட தொழிலை செய்வது என முடிவு எடுத்தார்.

சிறுவயது முதல் தான் சேர்த்து வைத்த சேமிப்புகளைக் கொண்டு தனது தந்தையின் தொழிலான மட்பாண்ட தொழிலை நவீன காலத்திற்கேற்ப, வளர்ந்து வரும் நாகரீகத்திற்கேற்ப மாற்றம் செய்து, தற்போது போதிய வருமானம் ஈட்டி, நான்கு நபர்களுக்கு வேலையும் கொடுத்து, தனது குடும்பத்தையும் மனநிறைவுடன் காப்பாற்றி வருகிறார்.

தனது பத்து சென்ட் நிலத்தில் தினமும் நபர் ஒருவருக்கு 300 ரூபாய் தினக்கூலி கொடுத்து பணியார சட்டி, தோசைக்கல், ஆப்பச்சட்டி, வாணலி, பல்வேறு வகையான விளக்குகள், பொம்மைகள், கடவுள் சிலைகள், உருளி, துளசி மாடம், செயற்கை பூச்சட்டி, குழாய் வைத்த தண்ணீர் கலன், நீர்க்குவளை, பறவைகளுக்கு தீவனத்தட்டு மற்றும் தண்ணீர் கலன், குருவி கலயம், உண்டியல், ஐஸ்கீரிம் கப், புகையில்லா அடுப்பு போன்ற கைவினைப் பொருட்களை கலைநயத்துடன் உற்பத்தி செய்து, பல்வேறு மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்கிறார்.

அனைத்து செலவுகளும் போக மாதம் ரூபாய் 30,000/– வரை சராசரியாக வருமானம் ஈட்டும் மூர்த்தி, உற்பத்தி செய்யும் கலைப்பொருட்களுக்கு மானாமதுரை வட்டாரத்தில் தனிச்சிறப்பு உண்டு. எனவே மண்ணைப் பொன்னாக்கும் மகத்துவம் அறிந்த இவரை நமது தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் சூரக்குளம் பில்லருத்தான் ஊராட்சியின் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் அணியில் தொழில் முனைவோர் பிரதிநிதியாக வளர்ச்சித் திட்டம் தீட்டவும், கிராம முதலீட்டுத் திட்டம் தீட்டவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

மண்ணைப் பொன்னாக்கும் மூர்த்தியின் முகவரி :

அ. மூர்த்தி, த/பெ. அருணாச்சலம், நவத்தாவு சன்னதி,
புதுக்குளம் மெயின் ரோடு, சூரக்குளம் பில்லருத்தான் ஊராட்சி,
மானாமதுரை தாலுகா, சிவகங்கை மாவட்டம்.
தொலைபேசிஎண் : 90435 76336

ஊரகப் புத்தாக்கத் திட்டத்தினாலே ஏற்றங்கள் பெற்றிடுவோம்!

அரசு நமக்களித்த புத்தாக்கத் திட்டத்தில்
ஆர்வமுடன் நாம் இணைந்து
இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்திடுவோம்!
ஈடுபாட்டுடனே தொழில்கள் பல செய்திடுவோம்!
உலக வங்கி உதவியுடன்
ஊரகப் புத்தாக்கத் திட்டத்தினாலே
எண்ணப்படி தொழில்கள், பல செய்து
ஏற்றங்கள் பெற்றிடுவோம் !
ஐயமின்றி நாம் வாழ்ந்திடவே
ஒற்றுமையாக நாம் உழைத்து
ஓர் அற்புதத்தை நாம் படைத்து
ஔவையின் ஊக்கமது கைவிடாமல் வெற்றி பெறுவோம்...!

● **ச. ரமேஷ்,** செயல் அலுவலர் (வணிக திட்டம் (ம) நிதி) ஊரகப் புத்தாக்கத் திட்டம், சிவகங்கை மாவட்டம்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத்தின் மூலம் வளமான வாழ்வாதாரம் பெற்றவர்களின் வெற்றிக் கதைகள்

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை வளமாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் வளம் பெற்றுள்ளவர்கள் தங்களின் வெற்றிக் கதைகளை முற்றம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

என் பெயர் செல்வராணி க/பெ. அசோக்குமார். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரம், மேலவாசல் ஊராட்சி, கீழத்தெருவில் வசித்து வரும் நான் மிகவும் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, ஏழை எளியவர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் அனைவரின் வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்திட ஆரம்பிக்கப்பட்ட ஒரு அமைப்பு என்று கிராம மக்கள் சொல்வதை கேட்டு அறிந்த நான், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுலில் செயல்படும் ஒரு மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைந்து செயல்படத் துவங்கினேன். என்னுடைய குடும்ப நிலையை பற்றி அறிந்து எனது குழுவில் இருந்து கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் எனக்கு ஆதார நிதியாக ரூ. 13,000/-வழங்கினார்கள். நான் அந்தத் தொகையைக் கொண்டு ஒரு சிறிய பெட்டிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். இந்தக் கடையின் மூலம் கிடைக்கும் வருவாய் எனது குடும்பத்தின் வறுமையை போக்கி வருகிறது. நானும் எனது குடும்பமும் தற்போது மகிழ்ச்சியாக இருக்கிறோம். எனது குடும்பத்தின் வறுமையைப் போக்கிட எனக்கு உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஒன்றியம், திருவேடகம் ஊராட்சிக்குட்பட்ட திருமால்நத்தம் குக்கிராமத்தில் வசித்து வரும் என் பெயர் பொன்மணி, க/பெ. சௌந்தரபாண்டி. மிகவும் ஏழைக் குடும்பத்தை சேர்ந்த நானும் என் கணவரும் கூலி வேலைக்குச் சென்று, அதில் கிடைக்கும் குறைந்த வருவாயில் வறுமையுடன் வாழ்ந்து வந்தோம். சுய தொழில் செய்வதற்கு போதிய முதலீடும் இல்லை. இந்நிலையில் நான் எங்கள் பகுதியில் செயல்படும் அம்பேம்கார் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக சேர்ந்தேன். எனக்கு அமுதசுரபி நிதி மூலம் ரூ. 20,000/- கடன் வழங்கப்பட்டது. அத் தொகையை மூலதனமாக வைத்து சிறிய அளவில் கோழி இறைச்சி கடை ஒன்றினை துவக்கினேன். ஆதில் கிடைத்த வருவாயில் வங்கிக் கடன் தொகை செலுத்தியது போக மீதித் தொகையை எனது குடும்பத்திற்கு பயன்படுத்திக் கொண்டேன். கடன் தொகையை முழுவதும் திரும்ப செலுத்தி மீண்டு கடன் வாங்கி எனது கடையை விரிவுபடுத்தியுள்ளேன். தினசரி ரூ. 500/-வரை வருவாய் கிடைக்கிறது. தற்போது எனது குடும்பத்தின் வறுமையும் நீங்கி விட்டது. எனக்கு வளமான வாழ்வாதாரம் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், நனது சுய உதவிக் குழுவிற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்களம் ஒன்றியம், பிச்சங்குறிச்சி கிராமத்தில் 15 பெண் உறுப்பினர்களைக் கொண்டு மல்லிகை மகளிர் சுய உதவிக்குழு செயல்பட்டு வருகிறது. இந்த குழுவில் உறுப்பினராக இருப்பவர் பாகம்பிரியாள் க/பெ செல்வராஜ். இவரது கணவரும் இவரும் தினக்கூலி வேலை செய்து குடும்பத்தை கவனித்து வந்தனர். ஆனாலும் போதிய அளவு வருமானம் இல்லாததால் இவர்களின் குடும்பம் மிகவும் வறுமையில் இருந்து வந்தது. இந்நிலையில் பாகம்பிரியாள் தான் உறுப்பினராக இருக்கும் மல்லிகை மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் கூட்டமைப்பில் தனிநபர் கடனாக ரூ. 15,000/-ம் பெற்று தனது கிராமத்தில் பெட்டிக்கடை வைத்து அதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 600/-வரை வருவாய் பெற்று வருகிறார். தனக்கு வாழ்வாதாரத்தை வளமாக்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு பாகம்பிரியாள் தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்.

21-ம் ஆண்டில் வெற்றிநடை போடும் முற்றம் இதழ்



சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!

முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம்.
சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டம் பணிக்குச் செல்லும் மகளிர் பயனடையும் திட்டம்

பணிக்குச் செல்லும் பெண்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையில், தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தினால் இன்று மாநிலம் முழுவதும் இலட்சக்கணக்கான பெண்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தினால் பயனடைந்த பெண்கள் தங்களின் மகிழ்ச்சியை முற்றத்தின் வாயிலாக பகிர்ந்து கொள்கின்றனர்.

எனது பெயர் நிர்மலா. இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி வட்டம், வண்ணாங்குண்டு ஊராட்சியில் வசித்து வரும் நான், வண்ணாங்குண்டு கிராமத்தில் மகளிர் ஆரோக்கிய தன்னார்வலராக பணியாற்றி வருகின்றேன். எனது பணியின் கராணமாக எனது கிராமத்தில் இருந்து திருப்புல்லாணி மருத்துவமனைக்கும் மற்றும் நான் பணிபுரியும் ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களுக்கும் பேருந்தில்தான் செல்ல வேண்டும். எங்கள் கிராமத்தில் இருந்து பேருந்து அடிக்கடி கிடையாது. குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் தான் உள்ளது. இரண்டு சக்கர வாகனம் வாங்கலாம் என்றால் அதற்குத் தேவையான பொருளாதார வசதி இல்லை. அதனால் என்னால் குறிப்பிட்ட நேரத்தில் பணிக்கு சென்று வர முடியாமல் மிகவும் சிரமமாக இருந்தது. இந்த நேரத்தில் தான் வேலைக்குச் செல்லும் மகளிருக்கு 50 சதவீதம் மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனம் திட்டம் குறித்து அறிந்து, அதற்காக விண்ணப்பம் செய்து, மானியத்துடன் கூடிய அம்மா இருசக்கர வாகனம் வாங்கியுள்ளேன். இப்பொழுது எனது பணிக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு சென்று வர முடிகிறது. எனது வேலையை செய்ய இலகுவாக உள்ளது. இதற்குக் காரணமாக இருந்த தமிழக அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி வட்டாரத்தில் உள்ள பருத்தியூர் ஊராட்சியில் வசித்து வரும் ஹேமலதா ஆகிய நான் கடந்த 5 வருடங்களாக ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுனராக பணிபுரிந்து வருகிறேன். ஊராட்சியில் திட்ட செயல்பாடுகள், சுய உதவிக் குழுவின் செயல்பாடுகள் மற்றும் நிதி இணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட அனைத்து குக்கிராமங்களுக்கும் கால்நடையாகவும், சைக்கிளிலும் சென்று வந்தேன். இது எனக்கு மிகவும் சிரமமாக இருந்ததுடன், திட்டம் குறித்த செய்திகளை குறித்த நேரத்தில் பொதுமக்களிடம் கொண்டு செல்ல முடியாமல் இருந்தது. இந்நிலையில் பணிபுரியும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. நானும் அம்மா இருசக்கர வாகனத்திற்காக விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு எனக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நான் எனது பணி யினை சிறப்பாகவும், தாமதமில்லாமலும் செய்து வருகிறேன். எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கிய மகளிர் திட்டத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பெயர் யாஸ்மின், திண்டுக்கல் மாநகராட்சி, பேகம்பூர் பகுதியில் வசித்து வரும் நான், திண்டுக்கல் நகரில் அமைத்துள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்றேன். தினமும் மினி பேருந்து மற்றும் ஷேர் ஆட்டோ மூலமாக வேலைக்குச் செல்வதால் மிகவும் சிரமப்பட்டேன். சொந்தமாக இருசக்கர வாகனம் வாங்கும் அளவிற்கு எனக்கு பொருளாதார வசதியில்லை. இந்நிலையில் மகளிர் திட்டப் பணியாளர் மூலம் பணிக்கு செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் குறித்து அறிந்து கொண்ட நான் அதற்கு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, எனக்கு அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானிய விலையில் வாகனம் வாங்குவதற்காக மகளிர் திட்ட அலுவலகத்தில் இருந்து அனுமதி உத்திரவு வழங்கினார்கள். வாகனத்தின் விலை, பதிவுக் கட்டணம், காப்பீடு ஆகியவற்றிற்கான செலவுத் தொகை ஆகியவை சேர்ந்து மொத்தம் ரூ. 50,394/-ஆகும். அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்தின்படி எனக்கு ரூ. 25,000/-மானியம் வழங்கப்பட்டது. நான் ரூ. 25,394/-மட்டும் செலுத்தி தற்போது இருசக்கர வாகனத்தை வாங்கியுள்ளேன். தற்போது நான் சிரமமின்றி பணிக்குச் சென்று வருகிறேன். எனக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கிய தமிழ்நாடு அரசு, மகளிர் திட்டம் ஆகியவற்றிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட பீகார் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் வருகை

தமிழகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட பீகார் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாநில திட்ட மேலாளர்கள் திரு. தீரஜ் குமார் சிங் மற்றும் ரித்தேஷ்குமார் ஆகியோர் 2020 பிப்ரவரி 02 அன்று தமிழ்நாட்டிற்கு வருகை தந்தனர்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) / தேசிய வள மையத்தின் (NRO) முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் அவர்களின் ஆலோசனையின்படி, மாநில வள மேலாளர் திரு. தா. தரணி மற்றும் உதவி வள மேலாளர் திரு. எம். ரமேஷ் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. வால்டர்பால் ஆகியோர் உதவியுடன், பீகார் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் குழுவினர் செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர்

ஊராட்சி ஒன்றியம், சிங்கபெருமாள் கோவில் ஊராட்சி மற்றும் திருத்தேரி குக்கிராமம் பகுதிகளில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வை யிட்டனர்.

ஆய்வின் முதல் கட்டமாக, பீகார் மாநில ஆஜீவிகா குழுவினர் சிங்கபெருமாள் கோவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை பார்வையிட்டனர். முன்னதாக கூட்டமைப்பின் சார்பில் குழுவினருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சுய உதவிக் குழு கூட்டமைப்பின் செயல்பாடுகள், கூட்டமைப்பில் உறுப்பினராக இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், அக்குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களின் வாழ்வாதார முன்னேற்றங்கள், அவர்கள் மேற்கொள்ளும் தொழில் நடவடிக்கைகள் போன்றவற்றை பீகார் மாநில ஆஜீவிகா குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், கூட்டமைப்பினருடன் விவாதித்தனர்.

சிங்கபெருமாள் கோவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் 132 சுய உதவிக் குழுக்கள் இணைந்துள்ளன என்றும், அவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 2080 என்ற விபரத்தையும், கூட்மைப்பின் சேமிப்பு மற்றும் வங்கிக் கடன் இணைப்பின் மூலம் ரூ. ஒரு கோடிக்கும் மேல் வரவு செலவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரத்தையும், கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்கள் ஒவ்வொன்றின் சார்பாகவும் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட உள்ளது என்ற விபரத்தையும் அறிந்த பீகார் மாநில ஆஜீவிகா குழுவினர், அக்கூட்டமைப்பினரைப் பாராட்டினர்.

மேலும் இக்கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாடுகளுக்காக கடந்த 2020 ஜனவரி 26 அன்று நடைபெற்ற குடியரது தின விழாவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப., அவர்களிடம் இருந்து பெறப்பட்ட 'சிறந்த மகளிர் குழு கூட்டமைப்பு' விருதினை பார்வையிட்ட இக்குழுவினர் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு தங்களின் வாழ்த்துகளைத் தெரி வித்துக் கொண்டனர்.

தொடர்ந்து திருத்தேரி கிராமத்தில் செயல்பட்டு வரும் மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுவின் செயல்பாடுகளை பீகார் மாநில ஆஜீவிகா குழுவினர் பார்வையிட்டனர். இக்குழுவில் மொத்தம் 11 உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவின் உறுப்பினர்களாக உள்ள மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதார செயல்பாடுகளைப் பார்வையிட்ட ஆஜீவிகா குழுவினரிடம், மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் வங்கிக் கடன் பெற்று தேனீர் கடை, பெட்டிக் கடை, சிற்றுண்டிக் கடை போன்றவற்றை வைத்திருப்பதாகவும், அதன் மூலம் வருவாய் பெற்று வருவதாகவும் கூறினர்.

குறிப்பாக தேநீர் கடை வைத்திருக்கும் உறுப்பினர், பீகார் மாநில ஆஜீவிகா குழுவினரிடம், "தன் கடைக்கு அருகில் இருக்கும் வங்கிகளின் பணியாளர்களுக்கு மாதாந்திர அடிப்படையில் காலை, மாலை வேளைகளில் தேநீர் வழங்க தனக்கு அனுமதி வழங்கி உள்ளதாகவும், அதன் மூலம் தனக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைப்பதாகவும், இதன் காரணமாக தனது வறுமை நீங்கி உள்ளதாகவும், மாற்றுத் திறனாளியான தங்களுக்கு வளமான வாழ்வாதாரம் ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும்" கூறினார்.

இவைகளைக் கேட்ட பீகார் மாநில ஆஜீவிகா குழுவினர் தமிழகத்தில் ஊரக வாழ்வாதார இயக்கம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக வறுமை நீங்கி வருவதாகவும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களின் வாழ்வாதாரம் வளம் பெற்று வருவதாகவும் பாராட்டியதுடன், தங்களின் பார்வையிடல் மற்றும் ஆய்விற்கு உறுதுணையாக இருந்த மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)/ தேசிய வள மையம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றிற்கு தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029.
Published from (77,200 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும், எங்கள் கையில் என சங்கே முழங்கு!

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் மூலம், நகர்ப்புற ஏழை, எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக் குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

Goverment Of India

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ்

கிராமப்புற இளைஞர்களுக்கான
திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்

100%

வேலைவாய்ப்புக்கு
044-3047 8047

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

DEEN DHAYAL UPADHYAYA GRAMEEN KAUSHALYA YOJANA (DDU-GKY)
TAMIL NADU STATE RURAL LIVELIHOODS MISSION,
Tamil Nadu Corporation for Development of Women,
Mother Theresa Womens Complex - 3rd floor, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 600 034. Phone : 91-44-2817 3415
E-mail : ddugkytn2016«gmail.com / cooddugkytn«gmail.com